விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 18 செவ்வாய்க்கிழமை (03.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 320

கலியாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## விபரீத முடிவெடுத்து உயிரிழந்த இளைஞனுக்கும்

### கொரோனா தொற்று உறுதி

(கொழும்பு)

பாணந்துறையில் விபரீத முடிவெடுத்து உயிரிழந்த இளைஞனுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக இவரது மரணம் 22ஆவது

23

## கொரோனா 275

(கொழும்பு)

இலங்கையில் நேற்று மட்டும் 275 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி

23

### பாடசாலைகளுக்கான விடுமுறையை

## மேலும் 2 வாரங்களுக்கு நீடிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில் பாடசாலைகளின் 3ஆம் தவணை விடுமுறைக் காலத்தை மேலும் நீடிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

23

## இந்திய தூதரக பணியாளருக்கு கொரோனா

(கொழும்பு)

கொழும்பில் உள்ள இந்திய தூதரக ஊழியர் ஒருவர் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

தற்போது அவர் இலங்கை அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பகுதியில மருத்துவ சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என தூதரகம் தெரிவித்

23

### அனைத்து மாவட்டங்களுக்கும் பரவியது கொரோனா

# கிளிநொச்சியிலும் நேற்று தொற்றாளர் அடையாளம்

### மாகாண சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி - கண்டாவளை பகுதியில் கொரோனாத் தொற்றுக்குள்ளான ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 24 மாவட்டங்களில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் ஏற்கெனவே அடையாளம் காணப்பட்ட நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றே முதலாவது கொரோனா தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 3 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

(23ஆம் பக்கம் பார்க்க)

நீங்கள் வேலைவாய்ப்புக்காக காத்திருப்பவர்களா?
வேலைவாய்ப்புக்கான பதவி வெற்றிடங்கள்
உள்ளே...

### மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தாததற்காகவே

## ஒரு வாரத்துக்கு கூட நாட்டை முடக்க ஜனாதிபதி விரும்பவில்லை

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா



(கொழும்பு)

நாட்டை ஒரு வாரம் முடக்குவது தொடர்பாக கலந்தாலோசித்தோம்.

எனினும் நாட்டு மக்களுடைய பிரச்சினைகள் குறித்தே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகம் கவனம் செலுத்தியதாக இராணுவத் தளபதி சவேந்

23

## கைவிரல் அடையாளம் பதிவு செய்யும் கருவியூடாக

### கொரோனா பரவும் அச்சம்

### உத்தியோகத்தர்கள் அதிருப்தி

(கொழும்பு)

அலுவலகங்களில் உத்தியோகத்தர்களின் வரவினைப் பதிவு செய்வதற்கு தற்போதும் கைவிரல் அடையாளம் பதிவு செய்யும் கருவி பயன்படுத்தப்படுவது குறித்து உத்தியோகத்தர்கள் கவலை

23

### மினுவாங்கொடவிலிருந்து யாழுக்கு வந்து

## வியாபாரத்தில் ஈடுபட்ட இருவர் அடையாளம்

### எந்த பதிவும் இல்லை

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் கொரோனா 2ஆம் அலை உருவான மிக ஆபத்தான மினுவாங்கொட பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் வந்து எந்தவிதமான பதிவுகளும் இல்லாமல் நடைபாதை வியாபாரம் செய்துவந்த

23

### விபத்துக்குள்ளான

## முதியவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பிய முதியவர் விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

குறித்த முதியவர் வலிப்பு நோய்

23

### இலங்கையில் கரையொதுங்கிய

## நூற்றுக்கணக்கான திமிங்கிலங்கள்

(கொழும்பு)

பாணந்துறை கடற்கரையில் சுமார் நூற்றுக்கணக்கான திமிங்கலங்கள் நேற்று மாலை கரையொதுங்கி உள்ளன.

இவை உயிருடன் இருப்பதாகவும், கரையோரத்தில் சிக்கித் தவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் திமிங்கிலங்

23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கட்சித் தலைவர்களுக்கான விசேட கூட்டம் இன்று

(கொழும்பு)

பாதீடு விவாதம் நடத்தப்படும் காலப் பகுதி தொடர்பில் இறுதித் தீர்மானத்தை எட்டுவதற்காக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித்தலைவர்களுக்கான விஷேட கூட்டம் ஒன்று இன்று இடம் பெறவுள்ளது.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இந்த கூட்டம் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, இன்றைய தினம் பாராளுமன்ற செயற்பாடுகளை நடத்தும் விதம் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முற்பகல் இடம்பெற்றது.

கொவிட்19 பரவலுக்கு மத்தியில் பாராளுமன்ற பணிக்குழாமினரை முகாமைத்துவப்படுத்துவது உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. (ம-03)

# முன்னாள் அமைச்சர் ராஜித குடும்ப உறுப்பினர்களுடன் தனிமைப்படுத்தப்பட்டார்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தனது குடும்பத்தினருடன் பொத்துவில் அருகம்பைக்கு இடையில் உள்ள ஹொட்டல் ஒன்றில் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட காலத்தில் இவர்கள் மாகாணத்தில் இருந்து வெளியில் சென்ற காரணத்தினால் அவர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இவர்கள் அருகம்பை பிரதேசத்திற்கு சுற்றுலா சென்றிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன உட்பட அவரது குடும்பத்தினர் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டு, தற்போது கொழும்பு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுள்ளது.

அமைச்சர் ராஜித சேனாரத்ன, தனது மனைவி இரண்டு புதல்வர்கள் மற்றும் மருமகள்களுடன் அருகம்பைக்கு சுற்றுலா சென்றிருந்ததாக கூறப்படுகிறது. (ம-3)

# யாழ். நகரில் விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர முதல்வர், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் இணைந்து நேற்றுத் திங்கட்கிழமை யாழ். நகரப் பகுதியில் கொரோனாக் கட்டுப்பாடு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதேவேளை மாநகரச் சட்ட விதிகளுக்கு முரணாக வர்த்தக நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொருட்களும் அப்புறப்படுத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-03,18)

## ஜயோதா Jayoda

சீட்டிழுப்பு வாரம் 1703 | சீட்டிழுப்பு திகதி 02/11/2020

வெற்றி இலக்கங்கள்: 20 48 56 59 | ஆங்கில எழுத்து: V

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 55,594,620

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

## சனிதா Shanida

சீட்டிழுப்பு இடம்பெற்ற திகதி 2020. 11. 02

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

| சீட்டிழுப்பு திகதி | சீட்டிழுப்பு இல | வர்ணம் | வெற்றி இலக்கங்கள் | ஆங்கில எழுத்து | ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் |
|---|---|---|---|---|---|
| 2020.10.30 (வெள்ளிக்கிழமை) | 3417 | ஆரஞ்சு | 03 29 45 67 | M | 5007 |
| 2020.10.31 (சனிக்கிழமை) | 3418 | பச்சை | 15 16 26 29 | U | 5102 |
| 2020.11.01 (ஞாயிற்றுக்கிழமை) | 3419 | இளஞ்சிவப்பு | 05 10 29 70 | E | 7903 |
| 2020.11.02 (திங்கட்கிழமை) | 3420 | நீலம் | 20 31 40 44 | U | 8371 |

கொரோனா தொற்று நோய் காரணமாக தேசிய ரீதியிலான அவசரகால சட்டம் செயற்படுத்தப்பட்டதன் காரணமாக 2020 ஒக்டோபர் 30ம் திகதியிலிருந்து 2020 நவம்பர் 01ம் திகதி வரை இடம்பெறவிருந்த சனிதா சீட்டிழுப்பானது 2020 நவம்பர் 02ம் திகதியன்று நடைபெற்றது.

www.dlb.lk

## அத கோடிபதி ADA KOTIPATHI

சீட்டிழுப்பு இடம்பெற்ற திகதி 2020. 11. 02

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

| சீட்டிழுப்பு திகதி | சீட்டிழுப்பு இல | வர்ணம் | வெற்றி இலக்கங்கள் | ஆங்கில எழுத்து |
|---|---|---|---|---|
| 2020.10.30 (வெள்ளிக்கிழமை) | 1087 | ஊதா | 24 25 35 77 | O |
| 2020.10.31 (சனிக்கிழமை) | 1088 | மஞ்சள் | 07 19 22 44 | T |
| 2020.11.01 (ஞாயிற்றுக்கிழமை) | 1089 | பச்சை | 01 11 18 57 | W |
| 2020.11.02 (திங்கட்கிழமை) | 1090 | சிவப்பு | 19 23 40 69 | G |

கொரோனா தொற்று நோய் காரணமாக தேசிய ரீதியிலான அவசரகால சட்டம் செயற்படுத்தப்பட்டதன் காரணமாக 2020 ஒக்டோபர் 30ம் திகதியிலிருந்து 2020 நவம்பர் 01ம் திகதி வரை இடம்பெறவிருந்த அத கோடிபதி சீட்டிழுப்பானது 2020 நவம்பர் 02ம் திகதியன்று நடைபெற்றது.

www.dlb.lk

## SUPER BALL சுப்பர் போல்

சீட்டிழுப்பு இடம்பெற்ற திகதி 02-11-2020

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

| சீட்டிழுப்பு திகதி | சீட்டிழுப்பு வாரம் | நிறம் | வெற்றி எழுத்தும் இலக்கங்களும் | SUPER 500 விசேட இலக்கம் |
|---|---|---|---|---|
| 30-10-2020 (வெள்ளிக்கிழமை) | 1261 | இளஞ்சிவப்பு | V 12 20 29 41 | 2 6 3 0 |
| 31-10-2020 (சனிக்கிழமை) | 1262 | நீலம் | Z 13 23 55 76 | 7 5 5 5 |
| 01-11-2020 (ஞாயிற்றுக்கிழமை) | 1263 | சிவப்பு | J 02 14 37 74 | 8 7 3 5 |
| 02-11-2020 (திங்கட்கிழமை) | 1264 | ஊதா | Q 02 09 29 68 | 8 9 8 9 |

கொரோனா தொற்று நோய் காரணமாக தேசிய ரீதியிலான கடுமையாக அவசரகால சட்டம் செயற்படுத்தப்பட்டதன் பொருட்டு 2020 ஒக்டோபர் 30ம் திகதியிலிருந்து 2020 நவம்பர் 01ம் திகதி வரை இடம்பெறவிருந்த சுப்பர் போல் சீட்டிழுப்பானது 2020 நவம்பர் 02ம் திகதியன்று இடம்பெற்றது என அறிவிக்கின்றோம்.

## ராசி அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு இடம்பெற்ற திகதி 02-11-2020

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

| சீட்டிழுப்பு திகதி | வெற்றி இலக்கங்கள் | ராசி | வெற்றி வாரம் | வர்ணம் | டபள் விசேட இல. ரூ.500 பரிசுக்குரிய | ரூ.100 பரிசுக்குரிய |
|---|---|---|---|---|---|---|
| 30-10-2020 (வெள்ளிக்கிழமை) | 19 33 42 47 | சிம்மம் | 2968 | கரு நீலம் | 1481 | 861 |
| 31-10-2020 (சனிக்கிழமை) | 38 48 51 56 | மிதுனம் | 2969 | இளம் நீலம் | 5523 | 991 |
| 01-11-2020 (ஞாயிறுக்கிழமை) | 29 31 49 57 | சிம்மம் | 2970 | ஊதா | | |
| 02-11-2020 (திங்கட்கிழமை) | 08 14 24 49 | சிம்மம் | 2971 | மஞ்சள் | | |

கொரோனா தொற்று நோய் காரணமாக அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச்சட்டத்தினால் 2020 ஒக்டோபர் 30ம் திகதியிலிருந்து 2020 நவம்பர் 1ம் திகதி வரை இடம்பெறவிருந்த ராசி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பானது 2020 நவம்பர் 2ம் திகதியன்று இடம்பெற்றது

www.dlb.lk

## மஹஜன சம்பத

திகதி 2020/11/02

சீட்டிழுப்பு இலக்கம் 4294

ஆங்கில எழுத்து: V | வெல்லப்பட்ட இலக்கங்கள்: 4 0 0 2 7 0

தேசிய லொத்தர் சபை

## கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

சீட்டிழுப்பு திகதி 02-11-2020

சீட்டிழுப்பு இலக்கம் 2589

ஆங்கில எழுத்து: R | வெற்றி இலக்கங்கள்: 07 08 11 31

தேசிய லொத்தர் சபை

## வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 1627 | திகதி 2020/11/02

ஆங்கில எழுத்து: R | வெற்றி இலக்கங்கள்: 03 28 60 61

தேசிய லொத்தர் சபை

## சுபிரி வாசனா

சீட்டிழுப்பு திகதி 2020 / 11 / 02 | சீட்டிழுப்பு இலக்கம் 1549

சுப்பர் இலக்கம் 01 | வெற்றி இலக்கங்கள் 26 34 40 56

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

# யார் ஆட்சியில் இருந்தாலும் ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குவது ஒவ்வொரு அரசாங்கத்தின் பொறுப்பாகும்

## சுதந்திர ஊடக இயக்கம் அறிக்கை

**ஊ (கொழும்பு) டகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதி வழங்குவது ஒவ்வொரு அரசாங்கத்தின் பொறுப்பாக இருந்தாலும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான ஒரு குற்றத்திற்குக் கூட நீதி வழங்கப்படாத வரலாற்றைக் கொண்ட ஒரு நாட்டில் வாழவேண்டியது குறித்து கவலை அடைவதாக சுதந்திர ஊடகஇயக்கம் கவலை தெரிவித்துள்ளது.**

நவம்பர் 2 - ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்ற ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை விலக்கை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு சுதந்திர ஊடக இயக்கம் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்போம் என்ற வாக்குறுதியுடன் ஆட்சிக்குவந்த அரசு கடந்த ஆட்சியின்போது பல சம்பவங்கள் குறித்த விசாரணைகளை ஆரம்பித்திருந்தாலும் அவை மந்த கதியிலேயே நகர்கின்றன.

நாட்டின் வரலாற்றில், ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்காக இரண்டு உயர்நீதிமன்ற வழக்குகள் மட்டுமே பதியப்பட்டுள்ளன. ஒன்று கிடப்பில் போடப்பட்டுள்ள தர்மரத்னம் சிவராம் கொலை தொடர்பான வழக்கு. மற்றது பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன சம்பவம் தொடர்பான உயர்நீதிமன்ற வழக்கு.

பிரகீத் எக்னெலிகொட காணாமல்போன சம்பவத்தில் முக்கிய சந்தேகநபர் ஜனாதிபதி ஆணைக்குழு முன் ஆஜராகி, தான் இதற்கு முன் வழங்கிய சாட்சியம் நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது என்று கூறியுள்ளார்.

இவ்வாறு கூறியுள்ளதானது, வழக்கில் ஒரு பாதகமான திருப்பத்தை ஏற்படுத்தும் என்பதையே தெளிவாகக்காட்டுகிறது.

சுதந்திர ஊடக இயக்கம் நடத்திய ஆய்வின்படி, இப்போதிருப்பது ஊடகவியலாளர்களுக்கு எதிராக அதிக எண்ணிக்கையிலான குற்றங்கள் இடம்பெற்ற காலகட்டத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கம் ஆகும்.

இந்தநிலையில் நீதியான விசாரணைகள் இடம்பெறுமா? என்ற கவலையை நீதிக்காக குரல் எழுப்பும் ஊடக சமூகத்தினரிடையே ஏற்படுத்தியுள்ளது.

ஒக்டோபர் 22 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம், ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் சுயாதீனமாக நடத்தப்படுமா? என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

20 ஆவது திருத்தத்தின் படி, இலங்கையின் அனைத்து உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறு நியமிக்கப்படும் பொலிஸ் அதிகாரிகள் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்து இதற்கு முன் செய்யப்படாதவகையில் விசாரணைகளை மேற்கொள்வார்களா?, அத்தகைய நீதிபதிகள் சுயாதீனமாக இருப்பார்களா? என்ற கேள்விகள் இந்தத்துறையில் எழுந்துள்ளன.

இந்தப் பின்னணியில்தான், ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் நவம்பர்-2 ஆம் திகதி இலங்கையில் அனுஷ்டிக்கப்படுகிறது.

யார் ஆட்சியில் இருந்தாலும் ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குவது ஒவ்வொரு அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்பது உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதியாகும்.


இலங்கையில் சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் பிற ஊடக அமைப்புகள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் தொடர்ந்து அனைத்து அரசாங்கங்களுக்கும் அழுத்தம் கொடுக்கிறார்கள். கோரிக்கைகள் விடுக்கின்றார்கள்.

வரலாற்றில் கல்லெறியப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க முழு அளவிலான ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அரசாங்கத்தை வலியுறுத்தும் அதேவேளை, ஊடக சமூகம் மற்றும் நீதியை மதிக்கும் அனைத்து சமூகங்களும் விசாரணைகளைத் துரிதப்படுத்த புதிய அரசாங்கம் மீது வலுவான அழுத்தம் கொடுக்குமாறு சுதந்திர ஊடக இயக்கம் வேண்டுகோள் விடுக்கிறது. (நி-4)

# இணையவழி கல்வியை வழங்க தீர்மானம்

## கல்வி அமைச்சர்




(கொழும்பு)

முன்னர் திட்டமிட்டபடி நவம்பர் 9 ஆம் திகதி மூன்றாம் தவணைக் கல்வி நடவடிக்கைக்காக பாடசாலைகளை மீண்டும் திறப்பது குறித்த இறுதி முடிவு இந்த வார இறுதியில் எட்டப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர், பாடசாலைகளை மீண்டும் திறப்பது தொடர்பான முடிவை எட்டுவதற்கு முன்னர் அது தொடர்பாக ஆழமாக சிந்தித்து செயற்பட வேண்டும் எனக்கூறினார்.

அத்தோடு பாடசாலை மாணவர்களின் சுகாதார பாதுகாப்பு மிக முக்கியமானது என்றும் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.

மாணவர்கள் கல்வியைப் பெறுவதை உறுதிசெய்ய, தேவை ஏற்படின் மாணவர்களுக்கு இணைய வழி கல்வியை வழங்கவும் தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார். (நி-4)



# எம்.சி.சி.ஒப்பந்தத்தில் கையெழுத்திடப் போவதில்லை

## ஜனாதிபதி கோட்டா

(கொழும்பு)

தமது அரசாங்கத்தின் கீழ் எம்.சி.சி. உடன்படிக்கையில் ஒருபோதும் கைச்சாத்திடுவதில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மக்களை ஈர்ப்பதற்காக அமெரிக்காவிற்கு எதிரான எதிர்ப்பை சிலர் வெளியிடுவதாக வார இறுதிப் பத்திரிகைக்கு வழங்கியுள்ள செவ்வியில் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

கனவிலாவது எம்.சி.சி. உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதில்லை. எம்.சி.சி.உடன் படிக்கையில் கைச்சாத்திட்டால் அவ்வாறு நடக்குமென்றும் இவ்வாறு நடக்குமென்றும் மக்களை ஈர்ப்பதற்காக சிலர் கூறுகின்றனர்.

எனினும், உடன்படிக்கையில் நாம் கைச்சாத்திடுவதில்லை. எம்.சி.சி.உடன்படிக்கையில் கைச்சாத்திட்டால் தாம் அரசாங்கத்திலிருந்து விலகுவதாக சிலர் கூறுகின்றனர். இது பார்வையாளர்களுக்காகக் கூறப்படும் விடயம்.

அமெரிக்க இராஜதந்திர குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்தால், முதலில் அவர்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான விடயங்கள் குறித்தே கலந்துரையாடுவர்.

எனினும், இம்முறை மனித உரிமை விவகாரங்கள் குறித்து நாமே அமெரிக்காவிற்கு ஞாபகப்படுத்தினோம். பழைய விடயங்களை மறந்து அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து செயற்பட அமெரிக்க இராஜாங்க செயலாளர் விருப்பம் தெரிவித்தார்.

சீனாவிற்கு அல்லது வேறு நாடுகளுக்கு அடிபணியாமல் இறைமையை பாதுகாக்கும் கொள்கையில் நாம் உள்ளோம் என்பதை அவர்களுக்கு சுட்டிக் காட்டினோம்.

எமது நாட்டை வேறு நாடொன்றுக்கு எதிராக பயன்படுத்துவதற்கும் வேறு நாடொன்றின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் விடயங்களுக்கு பயன்படுத்துவதற்கும் இடமளிப்பதில்லை என்பதையும் கூறியுள்ளோம்.

இந்தியா எமது சம்பிராதாய உறவினர். சீனா எமக்கு நெருக்கமான நாடு. இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் விடயங்களுக்காக எமது நாட்டைப் பயன்படுத்துவதற்கு இடமளிப்பதில்லை என்பதையும் நான் கூறியுள்ளேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது செவ்வியில் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவில் விடுதலைப்புலி உறுப்பினரின் உறவினரா?

## தீபிகா உடகம மறுப்பு

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து பணியாற்றி உயிரிழந்தவரின் உறவினர் ஒருவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இணைத்துக்கொள்ளப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி முன்வைத்த குற்றச்சாட்டினை ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மறுத்துள்ளார்.**



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அளித்த வாக்குமூலத்திற்கு பதிலளித்துள்ள ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் கலாநிதி தீபிகா உடகம, இது போன்ற குற்றச்சாட்டினை எதிர்கொள்வது இதுவே முதல் முறை என சுட்டிக்காட்டியுள்ளார்.

2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் இறுதி முதல் 2020 ஓகஸ்ட் வரை நான் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக இருந்தேன், அந்த காலப் பகுதியில் அவ்வாறான ஒருவர் நியமிக்கப்படவில்லை என வார இறுதி ஆங்கில பத்திரிகைக்கு அளித்த செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

தி ஐண்ட் பத்திரிகையின் தலைமை ஆசிரியர் ஷமிந்திர பெர்னாண்டோ, புலிகள் அமைப்பு செயற்பாட்டாளரின் குடும்ப உறுப்பினருக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அடைக்கலம் வழங்கியுள்ளதா? அப்படியானால் அந்த உயிரிழந்த உறுப்பினரின் பெயரும் அவரது மரணத்தின் சூழ்நிலையையும் வெளிப்படுத்த முடியுமா? என தீபிகா உடுகமவிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.


அதற்கு அவர் பதிலளிக்கையில், "எந்தவொரு ஆணையாளரும், புலிகள் அமைப்பின் உறுப்பினரின் குடும்பத்தில் உறுப்பினராக இருப்பது எனக்குத் தெரியாது. நான் ஆணைக்குழுவின் தலைவரான 2015 ஒக்டோபர் இறுதி முதல் 2020 ஓகஸ்ட் வரை எனது பதவிக் காலத்தில் இதுபோன்ற எந்தவொரு நபரும் ஆணைக் குழுவிற்கு நியமிக்கப்படவில்லை.

எனது பதவிக் காலத்தின் ஆரம்பத்தில் இருந்தே நிர்வாக சிக்கல்களால் ஒரு ஊழியரை நியமிக்க முடியவில்லை என்பது உண்மைதான். மறுபுறம், ஆணையாளர்களைப் பொறுத்தவரை, அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் விதிகளின்படி அரசியல் அமைப்புச் சபையின் பரிந்துரைகளுக்கு இணங்க ஜனாதிபதி அனைத்து ஆணையாளர்களையும் தலைவர்களையும் நியமிப்பார் என்பதை நீங்கள் அறிவீர்கள் என்று நான் நம்புகிறேன் என தீபிகா உடுகம பதிலளித்துள்ளார்.

புலிகள் அமைப்பின் உயிரிழந்த உறுப்பினரின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஊழியர் குழுவில் இணைத்துக்கொள்ளப்பட்டமை குறித்த குற்றச்சாட்டுச் தொடர்பில் விசாரணை செய்ய முன்னாள் ஜனாதிபதி தன்னை ஒருபோதும் அழைக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனைத்து ஆணையாளர்களையும் சந்தித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் குழுவுக்கு (UNCAT) மனித உரிமைகள் ஆணைக்குழு, 2016 ஒக்டோபர் மாதம் சமர்ப்பித்த அறிக்கை குறித்து அதிருப்தி தெரிவித்ததாக அவர் வலியுறுத்தினார். (ஐ-4)

## சிகிரியா மூடல்



(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவல் காரணமாக சிகிரியா காலவரையறையின்றி மூடப்படுவதாக மத்திய கலாசார நிதியம் தெரிவித்துள்ளது.

சிகிரியா தொடர்பாக போலி செய்திகளைப் பரப்புவதை தவிர்க்குமாறு பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளதோடு சிகிரியா அருங்காட்சியகத்திற்கு நுழைய அனுமதிக்கப்படாது என்றும் சிகிரியா திட்ட மேலாளர் துசிதா ஹேரத் தெரிவித்துள்ளார். மத்திய கலாசார நிலையத்திற்கு சொந்தமான சிகிரியா திட்ட அலுவலகத்தின் அன்றாட நடவடிக்கைகள் எவ்வாறாயினும் செயற்படும் எனத் தெரிவித்துள்ளார்.

சிகிரியாவைப் பார்வையிட உல்லாசப் பிரயாணிகளின் வருகை குறைந்துள்ளதால் அதிக வனவிலங்குகள் நடமாடுவதாக அப்பகுதி குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## மூன்றாம் கட்டத்திற்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தாக்கத்தின் நிலைமை மூன்றாம் கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த எச்சரிக்கையை சுகாதார அமைச்சு விடுத்துள்ளது.

அத்துடன் ஒரு கட்டத்திற்கு மேல் கொரோனாத் தொற்று அதன் தன்மையை மாற்றி வருகிறது என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. மேலும் தற்போது நாட்டில் கொரோனா தாக்கம் (Alert Level 3) மூன்றாம் கட்ட எச்சரிக்கை நிலையில் உள்ளதாகவும் சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது. (ஐ-4)

## தனிமைப்படுத்தல் நிலையமாக முகாமைத்துவ நிர்வாகம்



(கொழும்பு)

பொகவந்தலாவ மோரா கீழ் பிரிவு தோட்ட பகுதியில் அமைந்துள்ள தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிர்வாகத்தை தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்ற நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று அதிகரித்து காணப்படுகின்ற இந்தச் சூழ்நிலையில் குறித்த முகாமைத்துவ நிர்வாகம் தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# கடைகள், மருந்தகங்கள் திறக்க அனுமதியில்லை

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள மேல் மாகாணத்தில் மக்கள் தமது அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இரு நாட்கள் வர்த்தக நிலையங்கள், மருந்தகங்களை திறந்து வைக்கும் வேலைத் திட்டம் நடைமுறையில் பொருந்தாது என அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டத்தில் ஊரடங்கு அமுலிலுள்ள பொலிஸ் பிரிவுகளில் திங்கள் மற்றும் வியாழக்கிழமையும் கொழும்பு மற்றும் குருநாகலில் ஊரடங்கு அமுலிலுள்ள பொலிஸ் பிரிவுகளில் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமையும் காலை 8 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை வர்த்தக நிலையங்கள், மருந்தகங்களை திறந்து வைக்க அனுமதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த வேலைத்திட்டம் நடைமுறையில் இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



## இணையத்தள வழி மூலமாக மனவளக்கலை யோகாப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக பொதுமக்களுக்கு மனவளக்கலை யோகாப் பயிற்சியின் மூலமாக நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் நோயினைக் கட்டுப்படுத்துவதற்கும் ஏற்ற உடற்பயிற்சி தியானப்பயிற்சி மற்றும் காயகல்ப்பப் பயிற்சியினை சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பினை கருத்தில் கொண்டு இணையத்தள வழியாக மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்துள்ளது. எனவே அனைவரும் இவ் அரிய சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காலம் :- 04.11.2020 (புதன்கிழமை)
நேரம் :- மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை

Zoom ID :- 9506786590
Password :- vetha

அறிமுகவுரை :- மனவளக்கலை பேராசிரியர் சி.முருகானந்தவேல் அவர்கள்
பயிற்சி பற்றிய விளக்கம் :- மனவளக்கலை பேராசிரியர் வே. பாஸ்கரன் அவர்கள்
செய்முறை :- துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன் அவர்கள்

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81 பிறவுண் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு
0212222772/0714403268/0777368745/0714246309

(c-615)



## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

### 2021 ஆம் ஆண்டிற்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பனவற்றை 2021.01.01 ஆம் திகதி தொடக்கம் 2021.12.31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 03.11.2020 - 16.11.2020 பி.ப. 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 17.11.2020 பி.ப. 1.30 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 17.11.2020 பி.ப. 2.00 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்.

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 36,015.00 | 250.00 |
| 2 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 38,206.00 | 250.00 |
| 3 | கோழிக்கடை இல 06 | 1,000.00 | 10,000.00 | 179,300.00 | 250.00 |
| 4 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 64,050.00 | |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம்(மின்கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 750.00 | 7,500.00 | 47,766.00 | |
| 2 | இணுவில் கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 199,500.00 | 250.00 |
| 3 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 52,500.00 | |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு கோழிக்கடை | 7,50.00 | 7,500.00 | 162,750.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7500.00 | 40500.00 | 250.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2020.10.12 ஆம் திகதிய வலம்புரி, உதயன், தினக்குரல்ப் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

க.தர்ஷன்,
தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

(c-616)



# IN MEMORIAM



Born:- 23.05.1942 Died:- 03.11.1966

## V.T.MAHALINGAM
Sub-Inspector of police

*"MILLIONS OF ROSES WATERED BY OUR TEARS BLOOMS IN YOUR MEMORY FOR EVER"*

யாழ். இந்துக் கல்லூரியும், யாழ்.மத்திய கல்லூரி - பழைய மாணவன், யாழ்.மத்திய கல்லூரி மாணவத் தலைவர், மெய்வல்லுநர் போட்டிகளிலும் துடுப்பாட்டத்திலும் உதைபந்தாட்டத்திலும் சிறந்த வீரராகத் திகழ்ந்தார். 1963 இல் யாழ்.பாடசாலைகள் இணைந்த துடுப்பாட்டக் குழுவுக்கு தலைமை தாங்கி கொழும்பு பாடசாலைகளின் இணைந்த துடுப்பாட்டக் குழுக்களுக்கு எதிராக அந்தப் போட்டியில் கூடிய ஓட்டங்களைப் பெற்று (எழுபது) பந்துவீச்சில் கூடிய 11 (6+5) விக்கெட்டுக்களை வீழ்த்திய பெருமையும் இவரைச் சார்ந்தது. அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டியில் உயரம் பாய்தலிலும் நீளம் பாய்தலிலும் முதலிடம் பெற்றார். இலங்கை மெய்வல்லுநர் சங்கம் நடத்திய தேசிய மெய்வல்லுநர் போட்டியில் 1964 ஆம், 1965 இலும் உயரம் பாய்தலிலும் நீளம் பாய்தலிலும் முதலாம் இடம்பெற்று விளங்கினார். அரசாங்க திணைக்களங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் உயரம் பாய்தலிலும் நீளம் பாய்தலிலும் முதலிடம் பெற்றார்.

16/4,சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

இவரின் மறைவினால் துயருறும் V.T.லிங்கம்ஸ் குடும்பத்தினர்.

(4491)


# நவகமுவை தொழிற்சாலையில் 28 ஊழியர்களுக்கு தொற்று

(கொழும்பு)

முல்லேரியா - நவகமுவை வேக்வத்த வீதியில் அமைந்துள்ள தனியார் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் 78 ஊழியர்களில் 28 பேர் கொரோனாத் தொற்றாளர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக நவகமுவை பொதுச்சுகாதார பரிசோதகரின் அலுவலக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் 17 பேர் இந்தியர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலையின் அதிகாரிகள் தனியார் சுகாதார பிரிவினரை கொண்டு நடத்திய பி.சி.ஆர்.பரிசோதனையில் கொரோனாத் தொற்றாளர்கள் சிலர் அடையாளம் காணப்பட்டனர்.

இதனையடுத்து சுகாதார துறையினர் மற்றும் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. இதன் பின்னர் நடத்திய பரிசோதனைகளில் 28 பேருக்கு கொரோனா தொற்றியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலைமை காரணமாக தொழிற்சாலையில் கடமையாற்றும் ஊழியர்கள் அனைவரும் தொழிற்சாலைக்குள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ஜ-4)

# சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்



(கொழும்பு)

வெளிநாடுகளில் வசிப்போரின் காணிகளை சுவீகரிக்கும் அரசியல் குழு ஒன்று தொடர்பில் சமூக ஊடகங்களில் வெளியான செய்தி தொடர்பில் விசாரணை செய்யுமாறு பதில் பொலிஸ்மா அதிபருக்கு சட்டமா அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (ஜ-4)

# 10 பேர் கைது

(கொழும்பு)

அதுணகொலபெலெஸ்ஸ பகுதியில் சூதாட்டத்தில் ஈடுபட்ட 10 பேர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் இரவு பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது குறித்த நபர்கள் சூதாட்டத்திற்காக பயன்படுத்திய 45 ஆயிரம் ரூபாவையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். (ஜ-4)

# எல்லை மீறும் இந்திய மீனவர்கள் தமிழக முதல்வரை சந்திக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை இந்திய மீனவர்கள் இடையே ஏற்படும் பிரச்சினை நிரந்தரமாக தீர்ப்பதற்கு ஏதுவாக தமிழக முதல்வரை சந்தித்து தீர்வுகளைக் காண்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வேன் என கடற்றொழில் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி தலைமை அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடு தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில் தெருச் சண்டைகள் போல் இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையில் கடலில் சண்டை ஏற்படுவதை தவிர்க்க வேண்டும்.

இலங்கை-இந்திய மீனவர்கள் தொடர்பில் இந்திய தரப்புகள் பேசுவதற்கு இரு திகதிகளை தருமாறு துாதரகம் ஊடாக என்னை தொடர்பு கொண்டனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா சூழ்நிலையினால் இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதைத் தடுக்கும் முகமாக வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக குறித்த பேச்சுவார்த்தைகளை நடத்த தீர்மானித்துள்ளோம்.

எதிர் வரும் அமைச்சரவையில் குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி திகதியை உறுதிப்படுத்த முடியும்.

அத்துடன் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாக தமிழக முதல்வரை சந்திப்பதற்கான ஏற்பாடுகள் முழு வீச்சில் இடம்பெற்றுவரும் நிலையில் தமிழகத்தில் நடைபெறவுள்ள தேர்தல் நிலவரங்கள் சிலவேளை சந்திப்புகளை தாமதப்படுத்தலாம்.

ஆகவே நான் எடுத்துக் கொண்ட தீர்மானத்தின் படி தமிழக முதல்வரை சந்தித்து இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகளைக் காண்பதற்கான முழுமையான முயற்சிகளை மேற்கொள்வேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-4)



கார்த்திகை மரநடுகை வேலைத்திட்டம் தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசனால் நேற்று சிறுப்பிட்டி பார்வதி பரமேஸ்வரர் ஆலயத்தின் முன்பாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. (படம்-சிவசாந்தன்)

# வடமராட்சியில் பிடிக்கப்பட்ட முதலை வனவள திணைக்களத்திடம் ஒப்படைப்பு



(கரணவாய்)

கரணவாய் கல்லுவம் பகுதியில் நேற்று முதலை ஒன்றை தடம் வைத்து பொதுமக்கள் பிடித்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது, அப்பகுதி விவசாயிகள் வெங்காய பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அப்பகுதியை அண்டிய பகுதிகளில் மேய்ச்சலுக்காக ஆடுகள் கட்டப்பட்டு வருவது வழமை.

அப்படி மேய்ச்சலுக்காக கட்டப்பட்டிருந்த இரண்டு ஆடுகளை முதலை கொன்று தின்றுள்ளது.

அதனால் ஊர் மக்கள் சிலர் ஒன்று சேர்ந்து தடம் வைத்து முதலையை பிடித்துள்ளனர்.

அதனையடுத்து வனவள திணைக்களத்திற்கு தகவல் வழங்கப்பட்டது. அவ்விடத்திற்கு வந்த வனவள திணைக்களத்தினரிடம் முதலை ஒப்படைக்கப்பட்டது. (5-4-60)

# பல்கலைக்கழக அனுமதி குறித்த மேன்முறையீடுகளை மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அண்மையில் வெளியிடப்பட்ட Z Score புள்ளியிடலின் அடிப்படையில் 2019 / 2020 கல்வியாண்டுக்காக விண்ணப்பித்த மாணவர்களுள், மேன்முறையீடு செய்ய விரும்பும் மாணவர்கள் நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக மேன்முறையீட்டைத் தபால்மூலமாக அனுப்ப முடியாத நிலை இருப்பின், அந்த மேன்முறையீட்டுப் படிவத்தை உடனடியாக மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்குமாறும், ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளில் ஊரடங்கு தளர்த்தப்பட்டு நிலைமை சீரடைந்த பின்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பதிவிறக்கம் செய்யப்பட்டு, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியை appeals@ugc.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு விண்ணப்பத்தின் மாதிரியைப் ugc.ac.lk எனும் இணைப்பினூடாகப் பதிவிறக்கம் செய்ய முடியும். (5-4-33)

# சங்கீத சபைப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் எஸ்.சந்திரராஜா தெரிவித்துள்ளார்.

வட இலங்கை சங்கீத சபையினால் நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் சகல பிரிவுகளுக்குமான எழுத்துப் பரீட்சைகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொவிட் -19 பரவல் காரணமாக வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சைகள் அனைத்தும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன எனவும் பரீட்சைக்குரிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அதன் தலைவர் அறிவித்துள்ளார். (5-4-250)

# புலம்பெயர் உறவுகளின் சேவை எமது பிரதேசத்திற்கு தேவை

## சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர்

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளில் வசிக்கும் புலம்பெயர் உறவுகளின் சேவை தென்மராட்சிப் பிரதேசத்திற்கு தேவை என சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார். அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின்போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

எழுதுமட்டுவாழ் சந்தைப் பகுதியை துப்புரவு செய்யவும் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 89 மின் குமிழ்களைப் பொருத்துவதற்கும் எழுதுமட்டுவாழ் பகுதியைச் சேர்ந்த புலம்பெயர் இளைஞர்கள் முன்வந்துள்ளனர்.

இவ்வாறான முன்மாதிரியான இளைஞர்களின் செயற்பாடு சகல பிரதேசங்களிலும் இடம்பெற வேண்டும்.

தென்மராட்சி பரந்துபட்ட பிரதேசம். உள்ளூராட்சி சபைகள் எவ்வளவுதான் சேவை செய்தாலும் மக்களை திருப்திப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. எனவேதான் தென்மராட்சிக்கு புலம்பெயர் உறவுகளின் உதவிகள் அவசியம்தேவைப்படுவதாக அவர்மேலும் தெரிவித்திருந்தார்.(5,4,30)

# கடத்தப்பட்ட நான்கு மாடுகளை கைவிட்டு தப்பிச்சென்ற கடத்தல்காரர்

(கரணவாய்)

கொடிகாமம் வரணி பகுதியில் கடந்த திங்கட்கிழமை மாடுகள் சட்டவிரோதமாக கடத்தப்பட்டு கொண்டு செல்லப்படுவதாக நெல்லியடி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது கடத்தலில் ஈடுபட்ட நபர்கள் கடத்தப்பட்ட மாடுகளை வாகனத்தில் இருந்து தள்ளி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

கடத்தப்பட்ட கன்று உட்பட நான்கு மாடுகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டு நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டன.

அண்மையில் தங்களது மாடுகள் களவாடப்பட்டிருந்ததால் நெல்லியடி பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (5-4-60)

# சட்டவிரோத கட்டட நிர்மாணம் நிறுத்தப்பட்டது


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட ஆறுகால் மடம் பகுதியில் மழை நீர் வழிந்தோடும் வடிகாலை தடுத்து நிறுத்தும் வகையில் மாநகர சபையின் அனுமதி இன்றி சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுக் கொண்டிருந்த தனியார் காணி சுற்றுமதில் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைய நேரடிக் கள விஜயம் ஒன்றை கடந்த திங்கட்கிழமை யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் தலைமையிலான மாநகர சபை உறுப்பினர்கள் உள்ளடங்கிய குழுவினர் மேற்கொண்டனர்.

குறித்த விஜயத்தின் மூலம் அனுமதி இன்றி அமைக்கப்பட்ட சுற்றுமதில் கட்டுமானம் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு யாழ்.மாநகர முதல்வர் ஆலோசனை வழங்கினார்.

குறித்த கள விஜயத்தில் மாநகர பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், மாநகர வேலைப் பகுதி உத்தியோகத்தர்கள் மற்றும் மாநகர துறைசார் உத்தியோகத்தர்கள் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4)

## சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால் அவனருளாலே அவன் தாள் வணங்கி உயிர்ப்பிணி, உடற்பிணி இரண்டையும் நீக்கி உய்வடைவோம் "ஓம் நமசிவாய"



### மழை வேண்டல் பதிகம்
**திருவையாறு**

தல விளக்கம்:- காவிரி வடகரைத் தலம் திருநாவுக்கரசர் கயிலைக் காட்சியைக் கண்டு தரிசித்த திருத்தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் சேரமான் பெருமாள் நாயனாரும் தரிசிக்க முற்படும்போது இடையில் காவிரி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அப்போது இவர்கள் ஈசனைத் தரிசித்துத் திரும்பும் வரை காவிரி வெள்ளம் ஒதுங்கி நின்று இறையருளால் வழிவிட்டு நின்றது. ஆயை சிவாச்சாரியார் வெளியூர் சென்றிருந்த சமயம் சிவபெருமான் தமக்குத்தாமே பூசனை நிகழ்த்திய தலம். "ஐயாறு அதனில் சைவன் ஆகியும்" கீர்த்தித் திரு அகவல் திருவாசகத்தில் 85 ஆவது திருவரியில் மாணிக்க வாசகர் திருவாய் மலர்ந்து அருளினார். அகத்தியார் பூசித்த தலம். இத்தலம் பூலோக கயிலாயம் எனப்படும். திருஞானசம்பந்த சுவாமி மழை வேண்டி எங்கு இருந்தும் ஆயைத்திலும் வீட்டிலும்சுவாமி அறையிலும் திருஞானசம்பந்தர் ஓதிய 130, 131, 132, 133, 134, 135 பதிகங்களை நாமும் ஓதி இறை அருளையும் மழையையும் வேண்டுவோம்.

திருவையாறு - பதிக எண் - 130

பண்:- மேகராகக் குறிஞ்சி இராகம்:- நீலாம்பரி

திருச்சிற்றம்பலம்

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்டு ஐம்மேல் உந்தி
அலமந்த போதாக அஞ்சேல் என்று
அருள் செய்வான் அமரும் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழுவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில் பார்க்கும் திருவையாறே

தெளிவுரை:- ஐம்புலன்களும் தமது இயல்பிலிருந்து திரிந்து தனது வழியிலிருந்து மயங்கி அதற்குரிய அறிவும் கெட்டு, பித்த, வாயு, சிலேத்தும் நாளங்களின் மாறுபாட்டால் கபம் பெருக வருந்தும் போது அஞ்சேல் என்று அருள் செய்பவனாகிய ஈசன் அமரும் கோயில் திருக்கோயிலை வலம் வரும் பெண்கள் நடனம் ஆட முழவின் அதிரொலி கேட்ட சில மந்திகள் தடுமாற்றம் கொண்டு மேகத்தின் இடியோசை எனக்கருதி மரத்தில் ஏறி வானத்தைப் பார்க்கும் திருவையாறு ஆகும்.

சிவபெருமான் பரமகருணாநிதி. அன்புமயமானவன், ஆனந்தமயமானவன், அறிவு வடிவானவன். உடற்பிணி, உயிர்ப்பிணி, இரண்டையும் போக்க வல்லவை திருமுறைகள். காலத்திற்குக் காலம் எம் வினையை நாமே துய்த்து இன்பதுன்பங்களை அனுபவிக்கின்றோம். இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டு வாழ்ந்த நாயன்மார்கள் இறை நம்பிக்கையால் பதிகம் பாடிப் பல அற்புதங்கள் செய்தனர். அவை இன்றுவரை சிவாலயங்களில் ஓதப்பெறுகின்றன.

1) "அவ்வினைக்கிவ்வினை..." என்ற பதிகத்தைப்பாடி திருக்கொடிமாடச் செங்குன்றூர் மக்களின் குளிர்ச் சுரத்தைத் தீர்த்தருளினார் திருஞானசம்பந்தர்.
2) அவ்வாறே நெடுங்களம் என்னும் தலத்தில் துன்பம் போக்கவல்ல "மறை உடையார்" எனும் இடர்களையும் பாடியருளினார்.
3) கோள்களின் மூலம் வரும் துன்பத்தை நீக்க "கோளறு பதிகம்" "வேயுறு தோளிபங்கன்" பதிகம் பாடினார்.
4) ...நமசிவாயவே நன்னெறிக்காக்கும் என்பதற்கு அமைய தேவார முதலிகள் மூவரும் வேதத்தின் மையப்பொருளான நமசிவாய மந்திரத்தைப் பாடுபொருளாக்கி நமசிவாயப் பதிகத்தைப் பாடியுள்ளனர்.

பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டவும் இத்திருமுறைத் திருப்பதிகங்களை நாளும் ஓதி உய்வுபெற வேண்டுவது ஒவ்வொருவரது கடமையாகும். ஆலயங்களிலும் இல்லங்களிலும் உள்ளங்களிலும் இவற்றை ஒலிக்குமாறு செய்வது சிறந்ததொரு சிவப்பணியாகும். "ஓம் நமசிவாய" என எல்லா இல்லங்களிலும் சாயந்தரம் 6 மணியளவில் சமுத்திரமாக 1008 தடவை சொல்லுவோம்.

ஓம் நமசிவாய

**க.கு.க.சிவபாலன், அகில இலங்கைத் திருமுறை மன்றம்.**

(C-614)

# இறக்குமதி தீர்வை அதிகரிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் கருவாடு, மீன் மற்றும் மாசி என்பவற்றுக்கான இறக்குமதி தீர்வை அதிகரிக்கப்பட்டுள்ளது.

தேசிய மீன்பிடித்துறையைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, மீன்பிடி அமைச்சின் செயலாளர் இந்து ராமநாயக்க தெரிவித்துள்ளார். இறக்குமதி செய்யப்படும் 1 கிலோ கிராம் மீனுக்கு 200 ரூபாயும் கருவாடு 127 ரூபாய், மாசிக்கு 302 ரூபாய் தீர்வையும் அறவிடப்படுமென அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

**கம்சப்பிரியா இசைக்கல்லூரி**

ஓர்கன், வயலின், வீணை, புல்லாங்குழல், ஆர்மோனியம், கிற்றார் தனியாக கற்பிக்கப்படுகின்றன.

விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

இல.30, கிருஷ்ணபிள்ளைவீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

(4523)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## தென்மராட்சி பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

### பானை முறையிலான பொறித்தொகுதி திருத்தம் செய்வதற்கான மதிப்பீட்டறிக்கை பெற்றுக்கொள்ளல்

எமது வரணி வடிசாலையில் பொருத்தப்பட்டு சென்ற வருடம் தொழிற்பட்ட பானை முறையிலான பொறித்தொகுதியை 2021 ஆம் ஆண்டில் முழுமையாக தொழிற்படுத்தக்கூடியவாறு திருத்தம் செய்வதற்காக இத்துறைசார் தொழில்நுட்பவியலாளர்கள் மூலம் திருத்தத்திற்கான மதிப்பீட்டறிக்கையினை அலுவலக வேலைநாட்களில் (காலை 8.30 - 4.30) பார்வையிட்டு 15.11.2020 திகதிக்கு முன்னதாக **தலைவர், தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணி, பருத்தித்துறை வீதி, வரணி** எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தலைவர்:- திரு.க.துரைசிங்கம்

(C-611)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>கி.பா: சூரி, செவ் 10 இல் உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. சொந்தக்கடை<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/11338 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: College of Education ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: தகுந்த அரச, தனியார் உத்தியோகத்தர்<br>தொ.இ: G/11348 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>கி.பா: செவ் 8 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பல்வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: பல்வைத்தியர் சைவபோசனம் மட்டும்<br>தொ.இ: B/11342 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: 24 1/2 செவ் 10 இல்<br>தகைமை/தொழில்: இயன் மருத்துவ பட்டதாரி விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர்<br>தொ.இ: G/11349 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: செவ் 6 இல் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: Mechanical Engineering (Diploma) Private Work in Canada<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் இவர் மனைவியை இழந்தவர் விவாகரத்தும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/11343 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: செவ் 10 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Medical Student in Bangladesh (Final Year)<br>எதிர்பார்ப்பு: Civil Engineer, Doctor, Accountant<br>தொ.இ: G/11351 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா: 16 செவ் 9 இல் உயரம்: 170cm<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. நகைத்தொழில் (சொந்தம்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11345 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: செவ் 8 இல் உயரம்: 5'<br>தகைமை/தொழில்: HND in English Teacher<br>எதிர்பார்ப்பு: தகுந்த அரச, தனியார் உத்தியோகத்தர்<br>தொ.இ: G/11353 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# மன்னாரில் 1083 பேருக்கு பரிசோதனை நேற்றுவரை 12 பேருக்கு தொற்று

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 1083 பீ.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் நேற்று வரை 12 பேர் கொரோனாத் தொற்று உள்ளவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி.வினோதன் தெரிவித்துள்ளார். மன்னார் பிராந்திய சுகா தார சேவைகள் பணிமனையில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதம் கொரோனாத் தொற்றுள்ளவர்கள் 12 பேர் அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் 10 பேர் பட்டித் தோட்டம் பகுதியில் கட்டட வேலை மேற்கொண்டது போது தொற்று உள்ளவர்கள் என கண்டறியப்பட்டுள்ளனர்.

ஏனைய இரண்டு பேரும் பேலியகொட கொரோனா கொத்



தணியுடன் தொடர்பு உள்ளவர்கள். இவர்களில் 11 பேர் இரணவில சிகிச்சை நிலையத்திற்கும் ஒருவர் கந்தகாடு சிகிச்சை நிலையத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் 767 பரிசோதனைகள் யாழ். போதனா வைத்தியசாலையிலும் 316 பரிசோதனைகள் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையிலும் மேற்கொள்ளப்பட்டன. குறித்த பரிசோதனைகளின் போதே 12 பேரும் கொரோனாத் தொற்று உள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்டனர்.

தற்போது தொற்று உடையவர்களுடன் தொடர்பு உள்ளவர்கள் என்ற அடிப்படையிலும் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள பிரதேசங்களில் இருந்து இங்கு வந்து தங்கி இருந்த நிலையில் 173 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மன்னார் புதுக்குடியிருப்பு பகுதியில் தொற்றுள்ள ஒருவருடன் தொடர்பாக இருந்த 33 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனைக்ள் மேற்கொள்ளப்பட வுள்ளன.மேலும் கொழும்பில் தொற்று உள்ளவர் என அடையாளம் காணப்பட்ட நபருடன் தொடர்புடைய வங்காலைப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் முசலி பகுதியில் கொழும்பு மற்றும் மேல் மாகாணங்களில் இருந்து வந்து தங்கி இருந்தவர்களுக்கும் இன்று செவ்வாய்க்கிழமை பி.சி. ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட உள்ளதோடு மாந்தை மேற்கு மூன்றாம் பிட்டி பகுதியிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-285)



கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீனை விடுதலை செய்யக்கோரி முஸ்லிம் இளைஞர்கள் சிலரால் நேற்றுக் காலை மன்னார் சுற்றுவட்டப்பகுதியில் அடையாள கவனயீர்ப்பு போராட்டம் இடம் பெற்றது.

கொரோனா காரணமாக இறந்து போகும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரிப்பதை நிறுத்த வேண்டும் எனவும் அதே நேரத்தில் சிறுபான்மை இனத்தின் தலைவராக இருக்கும் ரிசாத் பதியுதீனை விடுதலை செய்யக்கோரியும் குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் கோரிக்கை முன்வைத்தனர். (படம்- ஜோசப் நயன்)

# டிப்பர்- மோ.சைக்கிள் விபத்து இளைஞர் காயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -அரசடிப் பகுதியில் ஏ-9 வீதியில் நேற்று திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற டிப்பர் -மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் காயமடைந்துள்ளார். இதில் காயமடைந்த இளைஞர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். காயமடைந்தவர் மந்துவில் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.(5-4-30)


# சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்

**01.01.2021முதல் 31.12.2021வரை மரக்கறிச் சந்தைகள், மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள்,கருவாட்டுக் கடைகள், களஞ்சிய அறைகள்,பொதுமலசலகூடம் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்விஅறிவித்தல்-2021**

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 03.11.2020- 16.11.2020வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :- 17.11.2020 மு.ப 10.00 மணிவரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 17.11.2020 மு.ப 10.30 மணி

**மீள்கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல | குத்தகைவிபரம் | ஆகக் குறைந்தகேள்வித்தொகை (VAT,NBT தவிர) | கேள்விவைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|
| | **கச்சாய் உப அலுவலகம்** | | | |
| 01 | கொடிகாமம் மீன் சந்தை | 1,473,100.00 | 14,700.00 | 750.00 |
| 02 | கொடிகாமம் சந்தைமாட்டிறைச்சிக்கடை | 861,300.00 | 8,600.00 | 750.00 |
| 03 | கொடிகாமம் சந்தைகோழி இறைச்சிக்கடை | 1,242,600.00 | 12,400.00 | 750.00 |
| 04 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 01 | 100,300.00 | 1,000.00 | 750.00 |
| 05 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல - 02 | 75,000.00 | 750.00 | 750.00 |
| 06 | களஞ்சியஅறை இல - 01 | 26,000.00 | 500.00 | 750.00 |
| 07 | களஞ்சியஅறை இல - 02 | 24,800.00 | 500.00 | 750.00 |
| 08 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்புநிலையத்திற்குஅருகாமையிலுள்ளமலசலகூடம் | 14,300.00 | 500.00 | 750.00 |
| 09 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 01 | 18,700.00 | 500.00 | 750.00 |
| 10 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 02 | 16,700.00 | 500.00 | 750.00 |
| 11 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் 03 | 15,700.00 | 500.00 | 750.00 |
| | **வரணி உப அலுவலகம்** | | | |
| 12 | வரணிபொதுச்சந்தை | 100,200.00 | 1,000.00 | 750.00 |
| 13 | வரணி இயற்றாலைபொதுச்சந்தை | 6,900.00 | 500.00 | 750.00 |
| | **கைதடி உப அலுவலகம்** | . | | |
| 14 | கைதடிமாட்டிறைச்சிக்கடை | 176,600.00 | 1,800.00 | 750.00 |
| 15 | கைதடிகோழி இறைச்சிக்கடை | 260,200.00 | 2,600.00 | 750.00 |
| | **மிருசுவில் உப அலுவலகம்** | | | |
| 16 | மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 300,800.00 | 3,000.00 | 750.00 |
| 17 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 69,000.00 | 690.00 | 750.00 |
| 18 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 41,800.00 | 500.00 | 750.00 |
| 19 | மிருசுவில் பொதுச்சந்தை | 4,800.00 | 500.00 | 750.00 |
| 20 | மிருசுவில் வடக்குபொதுச்சந்தை | 31,100.00 | 500.00 | 750.00 |
| 21 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 10,500.00 | 500.00 | 750.00 |
| | **நாவற்குழி உப அலுவலகம்** | | | |
| 22 | நாவற்குழிபொதுச்சநதை | 32,500.00 | 500.00 | 750.00 |

நிபந்தனைகள்

1.கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் குறித்த 03.11.2020 தொடக்கம் 16.11.2020 வரையான காலப்பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையில் பெற்றுக் கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீளஒப்படைக்கவேண்டும்.

2.கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், அதன் நிழற் படப்பிரதியினையும் கொண்டுவருதல் வேண்டும்.

3.கேள்வித் தொகை, படிவக் கட்டணம் என்பவற்றை செலுத்துதல் வேண்டும்.(Vat, NBT நீங்கலாக)

4.17.11.2020 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்டபிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

5.இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத வாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்படவேண்டும்.

6.கால்நடைகள் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சி கொண்டுவரப்படல் வேண்டும்.அத்துடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளிற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

7.குத்தகைதாரரினால் குத்தகைக்கு எடுத்து நடாத்தும் சந்தைக்கானஅறவீடுகளிற்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படல் வேண்டும்.

8.தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒருவாரகாலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்தவேண்டும். மிகுதித் தொகையினை1/6 பகுதிகளாக பிரித்து ஒவ்வொருமாதக் கட்டணமாக அடுத்தமாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாகஅறவிடப்படும்.

9.கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் குத்தகை விபரத்தினைகுறிப்பிட்டு ஒருபிரதியினை"**தவிசாளர்/செயலாளர்,சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்**" என்ற விலாசத்திற்கும், மறுபிரதியை "**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,யாழ்ப்பாணம்**" என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும்.

10.உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்டபின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

11.கேள்விகளை தகுந்த் காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்வும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.

12.மேலதிக விபரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். (சி-617)

**தவிசாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.**

## இராசிபலன்

03.11.2020
ஐப்பசி 18, செவ்வாய்க்கிழமை
திருதியை பின்னிரவு 2.10 மணிவரை
ரோகினி பின்னிரவு 1.56 மணிவரை
சுபநேரம் 10.34-12.04 மணிவரை
இராகுகாலம் 3.04-4.34 மணிவரை
சந்திராஷ்டமம் -சுவாதி, விசாகம்
அமிர்த சித்தம்
வளவன்


மேஷம்

எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.


ரிஷபம்

எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், மனதில் புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்.


மிதுனம்

தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், மற்றவர்களுக்கு உதவும் எண்ணம் உருவாகும், சுபவிரயங்கள் கூடும் நாள்.


கடகம்

குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் கிடைக்கும், காரிய அனுகூலமுண்டு.


சிம்மம்

முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், தொட்ட காரியங்கள் துளிர்விடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், ஆரோக்கியமான நாள்.


கன்னி

மங்கையர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், பற்றாக்குறை தீர்ந்து பண வரவு கிடைக்கலாம், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.


துலாம்

பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


விருச்சிகம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள்.


தனுசு

இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர்.


மகரம்

செய் தொழிலில் மேன்மையும், உயர்வும் கிடைக்கும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மறைமுக போட்டிகள் மாறும்.


கும்பம்

உறவினர் வழியில் மனத்திற்கினிய சம்பவமொன்று இடம்பெறலாம், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.


மீனம்

வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் சரளமாக இருந்தாலும் திடீர் விரயங்களும் ஏற்படலாம், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

நீ மனிதர்களோடு பேசும் அளவுக்கு கடவுளோடும் பேசு


# கொரோனா தடுப்பூசிக்காக கையெழுத்திட்டுள்ள இலங்கை

(கொழும்பு)

கொரோனாத் தடுப்பூசியை பெற்றுக் கொள்வதற்காக இலங்கை கைழெத்திட்டுள்ளது.எனினும் 2021 ஆம் ஆண்டு நடுப்பகுதி வரை கொரோனா வைரஸ் தடுப்பூசி கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று உலக சுகாதார மையம் அறிவித்துள்ளது.

கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசியின் பரீட்சார்த்த நடவடிக்கைகள் தற்போது இடம் பெற்று வருகின்றன.

இந்த நிலையில் 2021ஆம் ஆண்டிலேயே இந்தத் தடுப்பூசிகள் நாடுகளுக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக உலக சுகாதார மையத்தின் மேம்படுத்தல் மற்றும் தொலைத்தொடர்புகள் அலுவலர் சஹானி சந்ரரட்ன தெரிவித்துள்ளார்.



ஏற்கனவே கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசி கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகவும் தமது அமைச்சு அவற்றை பெற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்திருந்தார்.

இது குறித்து கருத்துரைத்துள்ள உலக சுகாதார அமைப்பின் மேம்படுத்தல் மற்றும் தொலைத்தொடர்புகள் அலுவலர் சஹானி சந்ரரட்ன, தடுப்பூசிகளின் மூன்றாம் கட்ட பரிசோதனைகள் இந்த வருட இறுதியிலேயே ஆரம்பிக்க வுள்ளதாக தெரிவித்துள்ளார். (ஜ-4)

## தீயணைப்புப் பிரிவிலும் பலருக்கு கொரோனா

(கொழும்பு)

கொழும்பு, தீயணைப்பு மற்றும் மீட்புப் பிரிவில் ஐந்து பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.


இதேவேளை கொழும்பு நகராட்சி யிலிருந்து பதிவான அனைத்து கொரோனா நோயாளர்களும் சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் பதிவான 1,767 கொரோனா நோயாளர்களில் 1,635 பேர் மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொத்தணிப் பரவலுடன் தொடர்புடைய வர்கள் ஆவர். (நி-4)

## இந்திய வெளிவிவகார அமைச்சர் நாட்டிற்கு விஜயம்

(கொழும்பு)

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.



இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயமொன்று இடம்பெறவுள்ள நிலையில் அதற்கு முன்னதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் விஜயம் இடம்பெறவுள்ளது. (ஜ-4)

## புகையிரதம் மோதி குடும்பஸ்தர் பலி

(கொழும்பு)

எலுவன்குளம் - அருவக்காடு பகுதியில் புகையிரதம் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை சுண்ணாம்புக்கல் சுமந்து சென்ற புகையிரதம் மோதி இவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் வனாத்துவில்லு பகுதியை சேர்ந்த 27 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை என விசாரணைகளின் வாயிலாக தெரியவந்துள்ளது.

உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (நி-4)

## 125 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொரோனா தொற்று உறுதி

(கொழும்பு)

கொவிட்-19 தொற்றுறுதியான பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 125 ஆக அதிகரித்துள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சுமார் 2 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## 228 பேர் வீடுகளுக்கு

(கொழும்பு)

கட்டாய தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை முடித்த 228 பேர் நேற்று தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து வெளியேறினர்.

முப்படையினரால் பராமரிக்கப்படும் ஐந்து தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களில் இருந்து இவர்கள் விடுவிக்கப்பட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இதுவரை 64 ஆயிரத்து 955 பேர் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை முடித்துள்ள அதேவேளை 4 ஆயிரத்து 39 பேர் தொடர்ந்து தனிமைப்படுத்தலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## 9 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

கொழும்பு, பொறளை பொலிஸ் நிலையத்தில் மேலும் 9 பொலிஸார் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பி.சி.ஆர். சோதனைகளின் முடிவுகளின் அடிப்படையிலேயே இவர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளானமை கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனா நோயாளர்கள் களுத்துறையில் அமைந்துள்ள கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொறளை பொலிஸ் நிலையத்தின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார். (ஜ-4)

# உலக கவனத்தை ஈர்த்துள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்


08

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பிரதிநிதி தெரிவுசெய்யப்படுகிறார்கள். 2010 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி, ஏழு மாநிலங்கள் குறைந்த பட்சம் ஒரு பிரதிநிதியையும், மிக அதிக மக்கள் தொகை கொண்ட கலிபோர்னியா ஐம்பத்துமூன்று பிரதிநிதிகளையும் கொண்டிருக்கிறது.

படம்-1




முன்னர் கூறியதுபோல் பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர்கள் ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் (பிரதிநிதிகள் சபையின் பதவிக்காலம் 2 ஆண்டுகள் ஆகும்). தேர்தலில் போட்டியிடுபவர் குறைந்த பட்சம் 25 வயதை அடைந்தவராகவும் மற்றும் குறைந்தபட்சம் ஏழு வருடங்கள் அமெரிக்க குடிமகனாக இருந்திருத்தல் வேண்டும் மற்றும் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மாநிலத்தில், (சில சமயங்களில் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டத்தில்) வசிப்பவராகவும் இருக்க வேண்டும். பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர்கள் நேரடியாக மக்கள் வாக்குகளால் பெரும்பான்மை முறைமையின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இப் பெரும்பான்மை முறைமையின் **(Majority System)** கீழ் தேர்தல் தொகுதியின் அதிகூடுதலான வாக்குகளை பெற்றுக்கொள்கின்ற வேட்பாளர், பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றார். **(First Past the Post System – FPP)**. சில மாநிலங்களில் பெரும்பான்மை முறைமையின் **(Majority System)** தேர்தல் நடைபெற்றாலும் அத் தேர்தல் முறை சிறிது வித்தியாசமாகும். இதைவிட 50 மாநிலங்களையும் தவிர்ந்த மற்றைய இடங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நான்கு வாக்களிக்கும் உரிமையில்லாத **(non-voting members)** உறுப்பினர்கள் பிரதிநிதிகள் சபையில் இருக்கிறார்கள்.

## செனட் சபை
## (மேல் அவை)

ஒவ்வொரு மாநிலமும் இரண்டு செனட்டர்கள் கொண்டு காங்கிரஸ்-செனட் சபையில் மொத்தம் 100 உறுப்பினர்கள் உள்ளனர். பொதுவாக இவர்கள் ஆறு வருட காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். செனட் சபையின் மூன்றில் ஒரு பகுதி இடங்களுக்கான தேர்தல் ஒரு வருடம் விட்டு (இரண்டு வருடத்திற்கு ஒரு முறை) நடக்கிறது. போட்டியிடுபவர் குறைந்தபட்சம் 30 வயதை அடைந்தவராகவும் மற்றும் குறைந்த பட்சம் ஒன்பது வருடங்கள் அமெரிக்க குடிமகனாக இருந்திருத்தல் வேண்டும் மற்றும் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மாநிலத்தில் வசிப்பவராகவும் இருக்க வேண்டும். செனட்டர்கள் நேரடியாக மக்கள் வாக்குகளால் பெரும்பான்மை முறைமையின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இப் பெரும்பான்மை முறைமையின் **(Majority System)** கீழ் மாநிலத்தில் வாக்குகளைப் பெற்றுக்கொள்கின்ற வேட்பாளர்கள், பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்படுகின்றார். **(First Past the Post System – FPP)**. 1913 இல் பதினேழாம் திருத்தம் ஏற்றுக் கொள்ளப்படும் வரை செனட்டர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை.


செனட்டர்கள் தங்கள் முழு மாநிலத் தேவைகள் மற்றும் பிரச்சினைகளை முன்னெடுக்கின்றனர். பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர்கள் தனிப்பட்ட மாவட்டங்களின் தேவைகளை முன்னெடுப்பர். பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் சபை ஆகியவற்றிற்கான தேர்தல்களும் அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கான தேர்தலும் வெவ்வேறானவை.

**பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் சபை ஆகியவற்றிற்கான தேர்தல்களும் அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கான தேர்தலும் வெவ்வேறானவை. மேலும் அவை வெவ்வேறு முறைமையின் கீழ் நடைபெறுகின்றன.**


வோஷிங்டன், டி. சி. (வோஷிங்டன், கொலம்பியா மாவட்டம்) க்கும், அமெரிக்காவின் ஆட்சிப் பகுதிகளான போர்ட்டோ ரீகோ, அமெரிக்க வெர்ஜின் ஜலன்ட், அமெரிக்க சமோவா, வாட மாரியானா தீவுகள், குவாம் ஆகிய பகுதிகளுக்கும் கீழ் சபை மற்றும் மேல் சபை உறுப்பினர்கள் இல்லை.




அமெரிக்க காங்கிரஸ்




*அமெரிக்கா பிரதிநிதிகள் சபை (House of Representatives)*



## நிறைவேற்றுத்துறை
## (ஜனாதிபதி):-

ஜனாதிபதி தான் இராணுவத்தின் தலைமை தளபதி ஆவார். நாடாளுமன்ற மசோதாக்கள் சட்டமாகும் முன் அவற்றின் மீதான இறுதி முடிவு அதிகாரம் செலுத்த முடியும். சட்டங்கள் மற்றும் கொள்கைகளை அமுல்படுத்தும் கபினட் மற்றும் பிற அதிகாரிகளை நியமனம் செய்கிறது.

## ஜனாதிபதி

ஜனாதிபதி நான்கு வருட காலம் பதவியில் இருக்கிறார். அவர் ஜனாதிபதி பதவிக்கு இருமுறைக்கு மேல் தேர்ந்தெடுக்க முடியாது என்றும் கூறியிருந்தோம். ஜனாதிபதி நேரடி வாக்களிப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை.

மாறாக தீர்மானிக்கும் வாக்குகள் மாநிலங்களுக்கு ஏற்ற பங்களிப்பைக் கொண்டிருக்கும் வகையிலான மறைமுக தேர்தல் அமைப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இதுபற்றி விரிவாக பின்னர் பார்ப்போம்.

(தொடரும்...)

# மீண்டும் வீட்டிலிருந்து வேலை செய்யும் முறை

**(கொழும்பு)**

**அரச ஊழியர்கள் வீடுகளிலிருந்தே பணியாற்றும் முறைமை நேற்று முதல் அமுலுக்கு வருவதாக பொது நிர்வாக சேவை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.**



இதற்கிணங்க, அந்தந்த நிறுவனங்களுக்குத் தேவையான ஊழியர்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கும் அதிகாரம் நிறுவன அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார். கொரோனாப் பரவலை கட்டுப்படுத்துவதற்காக வீட்டில் இருந்தே பணியாற்றும் முறைமையை மீண்டும் அமுல்படுத்துமாறு மேல் மாகாணம் மற்றும் ஏனைய முக்கிய நகரங்களிலுள்ள அரச நிறுவனங்களுக்கு அண்மையில் உத்தரவிடப்பட்டது.

குறிப்பாக வைரஸை கட்டுப்படுத்தும் நோக்கில் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் இந்த நடைமுறை முன்னெடுக்கப்படுகின்றது.

குறித்த மாவட்டங்கள் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அபாய வலயமாக பெயரிடப்பட்டுள்ள பகுதிகள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலுள்ள அரச நிறுவனங்களில், சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய அன்றாட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)


# 24 மணி நேரத்தில் 179 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேர காலப் பகுதியில் 179 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இக்காலப் பகுதியில் 29 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை முகக்கவசம் அணியாத 70 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.



ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக 1,812 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 282 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# கொரோனா ஒழிப்பில் வெளிப்படை இல்லை

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் ஒழிப்புக்காக அரசாங்கம் முன்னெடுத்து வரும் திட்டத்தில் எந்த வித வெளிப்படைத் தன்மையும் இல்லையெனக் குற்றஞ் சாட்டியுள்ள ஐக்கிய தேசியக்கட்சி, பெரும் தொகையும் மாயமாகியுள்ளது என குற்றம் சாட்டியுள்ளது.

குறிப்பாக உரிம வகையில் சுகாதார வசதிகளை வழங்க அரசாங்கம் தவறியிருப்பதோடு, வெளிநாட்டு நிதி உதவிகள் தொடர்பான விடயத்திலும் அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இத்தகைய நிலைமை காரணமாக, நாட்டு மக்களின் பாதுகாப்பு அவதானமான நிலையில் உள்ளதெனவும் ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது.

"சுகாதாரத் துறை அதிகாரிகள் கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதென கூறினாலும் தற்போதைய பாரதூரமான நிலவரம் வெளிப்படையாக ஆரம்பித்துள்ளது" என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக, வெட்டலேட்டர் கருவிகளை கடந்த மார்ச் மாதத்திலிருந்து அரசாங்கம் கொள்வனவு செய்யவில்லையென தெரியவந்துள்ளதோடு, அவசர சிகிச்சை பிரிவில் கொரோன்ா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக வெறுமனே 146 கட்டில்கள் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி, இயந்திரங்கள் போதுமானவை அல்லவென்றும், அதனை விடவும் கொரோனா வைரஸ் ஒழிப்புக்காகவும் மக்களுக்கு சலுகைகளை வழங்கவும் வெளிநாட்டு உதவித் தொகைகளுக்கு என்ன நடந்தது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

மேற்படி, உதவித் தொகைகள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி பல முறை கேள்வி எழுப்பினாலும் அரசாங்கம் அதற்கான பதிலை வழங்கத் தவறிவிட்டதெனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

# சுகாதார அமைச்சின் ஒழுங்கு விதிகள்

(கொழும்பு)

கொரோனா பரவலை அடுத்து ஊரடங்கு பிறப்பிக்கப்படாத இடங்களுக்கான சுகாதார நடைமுறை ஒழுங்கு விதிகளை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதில் சமூக இடைவெளி, மற்றும் கைகளை கழுவுதல் உட்பட்ட விடயங்கள் இதில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

கொரோனா பரவலின் தன்மை மாறியுள்ளமையை அடுத்து மூன்றாம் கட்ட தயார் நிலையை அறிமுகப்படுத்தியுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அத்தியாவசியப் பணிகளின் போது இரண்டு பேர் மாத்திரமே அதில் ஈடுபட முடியும். பேருந்து மற்றும் ரயில்களின் மொத்த ஆசனங்களில் 75 வீதமான ஆசனங்களில் மாத்திரமே பயணிகள் பயணிக்க முடியும்.

ஆட்டோ மற்றும் மினிபஸ்களில் இரண்டு பேர் மாத்திரமே பயணிக்க முடியும். ஏனைய வாகனங்களில் மொத்த ஆசன எண்ணிக்கையில் 50 வீதமானோரே பயணிக்க முடியும்.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் ஆகக்குறைந்த பணியாளர்கள் அலுவலகங்களில் இருந்தும் ஏனையோர் வீடுகளில் இருந்தும் பணியாற்ற வேண்டும்.

திருமணங்களுக்கு 50 விருந்தினர்கள் மாத்திரமே அனுமதிக்க முடியும். வியாபாரத்தளங்களின் இடவசதியைப் பொறுத்து 50 வீதமான வாடிக்கையாளர்களே உள்ளே அனுமதிக்கப்பட முடியும் போன்ற ஒழுங்குவிதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. (ஜ-4)

# மேலும் சில பகுதிகளுக்கு ஊரடங்கு

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்தில் எஹலியகொடை மற்றும் குருநாகல் மாவட்டத்தில் குளியாப்பிட்டிய ஆகிய பொலிஸ் பிரிவுகளிலும் குருநாகல் நகர சபை பகுதியிலும் நேற்று அதிகாலை 5 மணி முதல் எதிர்வரும் 9 ஆம் திகதி அதிகாலை 5 மணிவரை தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலாகின்றது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அத்துடன் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில் அத்தியாவசியப் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் மற்றும் மருந்தகங்கள் திறக்கப்படமாட்டாது எனவும் பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ஜ-4)

# 90 வீத தொற்றாளர்கள் அறிகுறி அற்றவர்கள்

(கொழும்பு)

நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள கொரோனாத் தொற்றாளர்களில் 90 வீதமானவர்கள் நோய் அறிகுறிகள் அற்றவர்கள் என சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் விசேட வைத்தியர் சஞ்ஜீவ முனசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# 20இற்கு ஆதரவளித்தோரில் நால்வருக்கு சன்மானம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட மூலத்துக்கு ஆதரவளித்தவர்களில் சிரேஷ்ட உறுப்பினர்களில் நால்வருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

சிரேஷ்ட உறுப்பினர்களான டபிள்யு டீ.ஜே.செனவிரத்ன, அனுர பிரியதர்ஷன யாப்பா, எஸ்.பீ.திஸாநாயக்க மற்றும் மகிந்த சமரசிங்க ஆகியோருக்கே குறித்த பதவிகள் வழங்கப்படவுள்ளன.

"எவ்விதமான இடையூறுகளுமின்றி, பிரச்சினைகளுமின்றி திருத்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு அரசாங்கத்துக்கு பூரண ஒத்துழைப்பை நல்கினேன். ஆளும் கட்சிக்குள் இருந்து கொண்டே பெரும் செயலொன்றை செய்துள்ளேன் என மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் கீழான அமைச்சரவையில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் 26 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் நான்கு அமைச்சுகளுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பாரதம்

## காஷ்மீரின் அனைத்துப் பகுதிகளும் இந்தியாவிற்கு சொந்தமானவை

### - இந்தியா திட்டவட்டம் -

(டில்லி)

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு செய்துள்ள காஷ்மீரின் பகுதிகள் அனைத்தும் இந்தியாவின் ஒருங்கிணைந்த நிலப்பகுதிகள் என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் அனுரக் ஸ்ரீவத்சாவா திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட காஷ்மீரின் கில்ஜித்-பல்திஸ்தானுக்கு மாகாண அந்தஸ்து கொடுக்கப் போவதாக பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் அறிவித்துள்ளார். இதற்கு இந்தியா தரப்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அனுராக் ஸ்ரீவத்சவா, " பாகிஸ்தானால் பலவந்தமாகவும் சட்டவிரோதமாகவும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட கில்ஜித் -பல்திஸ்தானை உள்ளடக்கிய லடாக் மற்றும் ஜம்மு காஷ்மீர் முழுவதும் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதிகள் தான்.

ஆக்கிரமிப்பு பகுதிகளில் அதிகாரம் செலுத்த பாகிஸ்தானுக்கு எந்தவித உரிமையுமில்லை. கடந்த 70 ஆண்டுகளாக ஆக்கிரமிப்பு பகுதிகளில் வாழும் மக்களுக்கு எந்தவித அடிப்படை உரிமைகளையும் பாகிஸ்தான் வழங்கவில்லை. பாகிஸ்தான். இராணுவத்தின் பலவந்தத்தால் அங்கு மனித உரிமைகள் நசுக்கப்படுகின்றன" எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்துக்கள், சீக்கியர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர் மீது இராணுவ அடக்குமுறைகளும் மனிதவுரிமை மீறல்களும் நடைபெறுவதாக ஐ.நா.மனித உரிமைக்குழுவிடம் இந்தியா முறைப்பாடு அளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## அமெரிக்க ஜனாதிப

## ஓய்வின்றிய பிரசாரப


(வோஷிங்டன்)

அமெரிக்காவில் இன்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ஜனாதிபதி வேட்பாளரான டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஜோ பிடன் ஆகிய இருவரும் இறுதிக்கட்ட பிரசாரத்தில் நேற்று தீவிரமாக ஈடுபட்டனர்.


உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளில் ஒன்றாக விளங்கும் அமெரிக்காவில் இன்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ளது.

கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் நடைபெறும் இந்த தேர்தல் சர்வதேச அளவில் பெரும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்



## தன்னை தானே தனிமைப்படுத்திய உலக சுகாதார அமைப்பின் தலைவர்



(ஜெனீவா)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான ஒருவருடன் தொடர்புகொண்டிருந்தமை தெரியவந்துள்ளதை அடுத்து உலக சுகாதார அமைப்பு தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார்.


இதனை அதானோம் கெப்ரேயஸ் தனது டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

நான் நலமாக இருக்கிறேன். எனக்கு தொற்று அறிகுறிகள் எதுவும் இல்லை. எனினும் முன்னெச்சரிக்கையாக வீட்டில் தனிமைப்படுத்திக்கொண்டு அங்கிருந்து பணிகளைச் செய்கிறேன் எனவும் அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்தார்.

நாம் அனைவரும் சுகாதார வழிகாட்டுதல்களைப் பேணுவது மிக முக்கியமானது. கொரோனா பரவலுக்கான தொடர்புகளை உடைத்து, வைரஸை அடக்கி, சுகாதார அமைப்புகளைப் பாதுகாக்க நாம் அனைவரும் செயலாற்ற வேண்டும் எனவும் அவர் தனது டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்து தொற்றுநோய் குறித்த விடயங்களை உலக சுகாதார அமைச்சு சரியாகக் கையாண்டு வருகிறது. அரசாங்கத் தலைவர்கள் மற்றும் விஞ்ஞானிகளுடன் இணைந்து வைரஸைக் கட்டுப்படுத்த உழைப்பதுடன், தடுப்பூசி ஒன்றை உருவாக்கும் பணியிலும் நாங்கள் ஈடுபட்டு வருகிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் உலகெங்கும் தொற்று நோய் பரவக் காரணமாக சீனா மீது அதானோம் கெப்ரேயஸ் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. சீனாவுக்குச் சாதகமாக உலக சுகாதார அமைப்பு செயற்பட்டு வருகிறது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விமர்சித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)



ஏழு மாதங்களுக்குப் பிறகு முதல் முறையாக மக்காவில் உள்ள கிராண்ட் மசூதிக்குள் வெளிநாடுகளை சேர்ந்த முஸ்லிம் யாத்திரிகர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## ஊரடங்கு கட்டுப்பாடுகளுக்கு எதிரான போராட்டத்தில் வன்முறை - பிரதமர் கண்டனம்

(மட்ரிட்)

ஸ்பெயினில் ஊரடங்கு கட்டுப்பாட்டுகளுக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டத்தில் வன்முறை வெடித்துள்ளது.

இந்நிலையில் கட்டுப்பாடுகளுக்கு எதிராக நாடு முழுவதும் உள்ள நகரங்களில் தொடர்ச்சியான வன்முறை போராட்டங்களுக்கு ஸ்பெயினின் பிரதமர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து டுவிட்டரில் பதிவிட்டுள்ள அவர் "பொறுப்பு, ஒற்றுமை மற்றும் தியாகத்திலிருந்து மட்டுமே எல்லா நாடுகளையும் பேரழிவிற்கு உட்படுத்தும் தொற்றுநோயை தோற்கடிக்க முடியும்.


சிறுபான்மை குழுக்களின் வன்முறை மற்றும் பகுத்தறிவற்ற நடத்தை தாங்க முடியாதது. அது வழி அல்ல" எனத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாம் அலை தொடங்கியதையடுத்து அங்கு 6 மாத காலத்திற்கு அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து

# வெளிநாடு

# பதித் தேர்தல் இன்று
# ம் நேற்றுடன் நிறைவு



மீண்டும் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து ஜனநாயக கட்சி சார்பில் முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பிடன் களமிறங்குகிறார். கொரோனா வைரஸ், இனப் பாகுபாடு ஆகிய விவகாரங்கள் இந்த தேர்தலில் முக்கிய பிரச்சினைகளாக முன் வைக்கப்பட்டுள்ளன.

கொரோனா அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தேர்தல் நடந்தாலும் கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் அமெரிக்க மக்கள் இந்தத் தேர்தலில் வாக்களிப்பதற்கு மிகுந்தஆர்வம் காட்டிவருகின்றனர்.

அந்தவகையில் 8 கோடியே 50 இலட்சம் பேர் முன்கூட்டியே தங்கள் வாக்கை செலுத்தினர். அதைப்போல் தேர்தல் நாளன்று இதுவரை இல்லாத அளவுக்கு அதிக எண்ணிக்கையில் வாக்குகள் பதிவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

## 'ஜேம்ஸ் பாண்ட்' கொனறி உயிரிழந்தார்



(பஹாமாஸ்)

பிரபல ஸ்கொட்லாந்து நடிகர் சேர் சீன் கனோரி (Sir Sean Connery) தனது 90 ஆவது வயதில் மரணமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஓகஸ்ட் 25, 1930 ஆம் ஆண்டு பிறந்துள்ள சேர் சீன் கனோரி ஒரு ஓய்வு பெற்ற ஸ்கொட்டிஷ் நடிகரும் தயாரிப்பாளரும் ஆவார். சேர் சீன் கனோரி "ஜேம்ஸ் பாண்ட்" கதாபாத்திரத்தின் மூலம் திரையுலகில் மிகவும் பிரபலமானார் . ஜேம்ஸ் பாண்ட் கதாபாத்திரத்தை முதன்முதலில் திரையுல குக்கு அறிமுகப்படுத்திய பெருமையும் இவரையே சாரும்.

நடிப்பு திறமையினால் ஐந்து தசாப்தங்களாக திரையுலகில் நீடித்த இவருக்கு 1988 ஆம் ஆண்டில் "தி அண்டச்சபிள்ஸில்" என்ற திரைப்படத்திற்காக ஒஸ்கார் விருது கிடைத்தது. கடந்த 1999 இல், இவர் "நூற்றாண்டின் கவர்ச்சியான மனிதர்" என்று தேர்ந்தெடுக்கப்பட்டார். திரைப்பட நாடகத்திற்கான சேவைகளுக்காக 2000 ஆம் ஆண்டு இவருக்கு கனோரி நைட் என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (நி)

## அமெரிக்காவிற்கு நிகராக இராணுவத்தை நவீனப்படுத்த சீனா திட்டம்



(பீஜிங்)

2027ஆம் ஆண்டிற்குள் அமெரிக்காவுக்கு நிகராக இராணுவத்தை நவீனப்படுத்த சீனா திட்டமிட்டுள்ளது.

உலக வல்லரசுகளின் முதல்வனாக அமெரிக்கா தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அந்த அமெரிக்காவுக்கு ஒரு போட்டியாளராக ஆசியாவில் எழுச்சி பெற்று வருகிறது, சீனா.

அமெரிக்காவுக்கு தாங்களும் சற்றும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்து, சர்வதேச அரங்கில் தாங்களும் முதல்வனாக இருப்போம் என்பதை நிலை நாட்டுவதற்காக சீனா திட்டமிட்டு செயற்பட்டு வருகிறது. சமீபத்திய ஆண்டுகளில் அது எடுத்து வைக்கும் அடிகள் அனைத்தும் அமெரிக்காவை மிஞ்ச வேண்டும் என்ற எண்ணத்திலேயே இருக்கிறது.

இந்த போக்கினாலேயே அமெரிக்காவும், சீனாவும் அடிக்கடி மோதல் போக்கையும் கடைப்பிடித்து வருகின்றன. பொருளாதாரம், வர்த்தகம், பாதுகாப்பு என அனைத்து துறைகளிலும் சமீபத்திய ஆண்டுகளில் இரு நாடுகளுக்கு இடையேயான மோதல் வலுத்து வருகிறது.

பொருளாதாரம், வர்த்தகம் என பிற துறைகளில் அமெரிக்காவுக்கு நிகராகவோ அல்லது அதற்கு மேலாகவோ சீனா முன்னேறினாலும், படைபலத்தில் அமெரிக்காவை மிஞ்ச முடியாத நிலைதான் நீடிக்கிறது. அடுத்த தலைமுறை ஆயுதங்கள் மற்றும் போர் தளபாடங்களுடன் மிகவும் நவீன முறையில் விளங்கும் அமெரிக்க இராணுவத்தை ஒப்பிடுகையில் சீனாவின் மக்கள் விடுதலை இராணுவம் பின்தங்கியே இருக்கிறது.

எனவே அமெரிக்க இராணுவத்துக்கு நிகராக சீனாவின் இராணுவத்தையும் நவீனப்படுத்துவதற்கு அந்த நாடு திட்டமிட்டு உள்ளது. குறிப்பாக சீன இராணுவம் தோற்றுவிக்கப்பட்ட நூற்றாண்டான 2027 ஆம் ஆண்டிற்குள் அதை நவீனப்படுத்தி மேம்படுத்த சீனா முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## துருக்கி நிலநடுக்கம்

## 34 மணி நேரத்திற்குப் பின்னர் 70 வயது முதியவர் உயிருடன் மீட்பு



(இஸ்தான்புல்)

துருக்கி நிலநடுக்கத்தால் கட்டடம் இடிந்து விழுந்து 34 மணி நேரத்துக்கு பிறகு 70 வயது முதியவர் ஒருவர் நேற்று முன்தினம் அதிகாலை உயிருடன் மீட்கப்பட்டார்.

துருக்கி நாட்டின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள இஸ்மிர் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 7.0 ஆக பதிவான அந்த நிலநடுக்கத்தால் இஸ்மிர் நகரமே உருக்குலைந்து போயுள்ளது.

ஆங்காங்கே கட்டடங்கள் இடிந்து முற்றிலும் தரைமட்டமாகியுள்ளன. இந்த நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 53 ஆக அதிகரித்துள்ள நிலையில், படுகாயமடைந்த சுமார் 900 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனிடையே கட்டட இடிபாடுகளில் ஏராளமானவர்கள் சிக்கியிருப்பதால் தொடர்ந்து மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன.

இந்த நிலையில் இஸ்மிர் நகரில் நிலநடுக்கத்தால் கட்டடம் இடிந்து விழுந்து 34 மணி நேரத்துக்கு பிறகு 70 வயது முதியவர் ஒருவர் நேற்று முன்தினம் அதிகாலை உயிருடன் மீட்கப்பட்டார். இதையடுத்து அவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவர் நலமாக இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

நிலநடுக்கம் தாக்கிய 34 மணி நேரத்துக்குப் பிறகு ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டு இருப்பது மீட்புக் குழுவினருக்கு நம்பிக்கை அளிப்பதாக அமைந்துள்ளது. அவர்கள் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி இருக்கும் எஞ்சியவர்களை மீட்கும் பணியில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர். (நி)



மாட்ரிட் நகரில் கூடிய போராட்டக்காரர்கள், வீதிகளில் இருந்த குப்பைத்தொட்டிகளுக்கு தீவைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தை கட்டுக்குள் கொண்டுவர முயன்ற பொலிஸார் மீது கற்கள் வீசி தாக்கப்பட்டதால் இருதரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. (நி)

# இன்று இரண்டு மணிநேரம் மட்டுமே பாராளுமன்றம் கூடும்

**(கொழும்பு)**

**பாராளுமன்றம் இன்று இரண்டு மணி நேரம் மட்டுமே கூடவுள்ள நிலையில், இதன் போது சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் இரண்டு புதிய விதிமுறைகளை முன்வைப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.**



இன்று முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை மட்டுமே பாராளுமன்றம் கூடும் என்றும் இதன்போது சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் இரண்டு விதிமுறைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் பாராளுமன்ற பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.


இதேவேளை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்ற அலுவல் பற்றிய குழு கூடவுள்ளது.

இதன்போது 2 மற்றும் 3 ஆவது வாசிப்பைத் தொடர்ந்து 2020 ஆம் நிதியாண்டிற்குரிய சேவை செலவினங்களுக்காக நிதி அமைச்சர் சமர்ப்பித்த நிதி ஒதுக்கீட்டுப் பிரேரணையை அடுத்த மாதம் 12 ஆம் திகதி நிறைவேற்றுவதாக சபாநாயகர் தீர்மானித்துள்ளார்.

அதேவேளை, பாராளுமன்ற அமர்வு இடம்பெறும் தினத்தன்று பாராளுமன்ற உறுப்பினர்கள், அழைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தவிர வேறு எவரும் பாராளுமன்றத்திற்கு செல்ல அனுமதி கிடையாது.

ஊடகவியலாளர்களுக் கும் அனுமதி இல்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# ‘20’ ஐ ஆதரித்தமைக்கான பயன்கள் விரைவில் வெளிப்படும்-நஸீர் அஹமட்



(கொழும்பு)

‘20’ ஐ ஆதரித்த அரசியல் வியூகத்திற்கான பலாபலன்கள் சமூக நலன்களாக விரைவில் வெளிப்படும்போது பலரின் வாய்கள் அடைபட்டுப் போகும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான நஸீர் அஹமட் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்தமை பற்றி தெளிவூட்டும் அறிக்கை ஒன்றை திங்கட்கிழமை வெளியிட்டுள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

“எதையும் நிபந்தனையாக முன்வைக்காமல் ‘20’ ஐ ஆதரித்ததாக சிலர் எம்மை விமர்சிக்கின்றனர்.

பேரினவாதத்தின் விழிப்புக்கு மத்தியில் முஸ்லிம் சமூகம் சார்ந்த சில நலன்களை வியூகத்தின் வடிவிலே சாதிக்க வேண்டியுள்ளது.

இதனால்தான் இன்று வரைக்கும் மௌனியாகச் செயற்படுகிறோம்.

காலப்போக்கில் சமூக நலன்கள் கைகூடுகையில், எங்களால் பேசப்பட்டவைகள் எவை என்பதை முஸ்லிம் சமூகம் உணர்ந்து கொள்ளும்.

இவ்வேளையில் விமர்சிக்கும் வீணர்கள் வாயடைத்து வெட்கிக்கப் போவது உறுதி.

பேரம் பேசும் பலம் இழந்துள்ளதாகக் காட்டப்பட்ட அரசியல் பின்புலங்களிலும் அவ்வாறு பலம் குன்றவில்லை என்பதை நொடிப் பொழுதில் நிரூபித்தவர்கள் நாங்கள்.

காலச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அரசியல் காய்களை நகர்த்த வேண்டிய நிலைமைக்கு சிறுபான்மையினர் தள்ளப்பட்டுள்ளதை இந்த வீணர்கள் விளங்காதுள்ளமைதான் எமக்குள்ள கவலை.

தம்பட்டமடிக்காது தக்க தருணத்தில் அரசுக்கு கைகொடுத்த எமது சமயோசித அரசியல் வெற்றி பெறும் நாட்கள் வெகு தொலைவிலும் இல்லை.

கொரோனா வைரஸின் சூழலில் முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டுள்ள சமய நம்பிக்கைகள் மீதான கெடுபிடிகளைக் கருத்தில் கொள்ளாமலும் நாங்கள் இருபதை ஆதரிக்கவும் இல்லை.

அல்லாஹ்வின் உதவியால் எமது வியூகங்கள் அனைத்திற்கும் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது என்றும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## குருவும் சீடனும்

ஒரு ஊரிலே ஒரு பெரியவர் இருந்தார். அவர் ஒரு குரு. அவர் தொடர்ந்து தியானக் கூட்டங்கள் நடத்துவார்.

அந்தக் கூட்டத்திலே கலந்து கொள்வதற்காக பல ஊரிலேயிருந்து சீடர்கள் நிறையப் பேர் வருவார்கள், போவார்கள்.

ஒருநாள் அங்கே கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அந்தச் சமயத்திலே சீடர்களிலே ஒருத்தன் என்னத்தையோ திருடி விட்டான்.

மற்ற சீடர்கள் அதை கவனித்து விட்டார்கள். இவன் அகப்பட்டுக்கொண்டான். கூட்டம் முடிந்த பிறகு இவன் திருடின விடயத்தை அந்தப் பெரியவரிடம் போய் சொன்னார்கள். அவர் கவத்திற்கு கொண்டு வந்தார்கள்.

ஆனால் அவர் இதைக் காதிலே போட்டுக்கவே இல்லை. போய் சொன்ன சீடர்களுக்கெல்லாம் ஏமாற்றமாகப் போச்சுது. “என்ன இது... இவ்வளவு தூரம் நாம் கண்டு பிடித்துப் போய் சொல்கிறோம். அவர் கண்டுகொள்ளவே மாட்டாராம்” என்று ஒரு மாதிரியா ஆகிவிட்டார்கள்.

இருந்தாலும் அதைப்பற்றி ஒன்றுமே சொல்லாமல் பேசாமல் இருந்தார்கள். கொஞ்ச நாள் கழித்து அதே ஆளு மறுபடியும் ஒரு திருட்டிலே மாட்டிக்கொண்டான்.

சீடர்கள் மறுபடியும் அந்தக் குருவிடம் விடயத்தைச் சொன்னார்கள். அவர் அப்பவும் வழக்கம் போல சும்மாவே இருந்து விட்டார். இவர் இப்படி இருக்கிறதைப் பார்த்ததும் அந்தச் சீடர்களுக்குக் கோபம் வந்து விட்டது.

உடனே அந்த சீடர்கள் எல்லாம் ஒன்றுகூடிப் பேசினார்கள். எல்லாருமா சேர்ந்து ஒரு விண்ணப்பம் தயார் செய்தார்கள். அதைக் குருநாதரிடம் கொண்டு போய் கொடுத்தார்கள்.

அந்த விண்ணப்பத்திலே இவர்கள் என்ன எழுதியிருந்தார்கள் தெரியுமா? “குருநாதரே! உடனடியாக திருடியவன் மீது நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவனை இங்கே சேர்க்கக் கூடாது. இந்த மடத்தை விட்டே அவனைத் துரத்திட வேண்டும். நீங்கள் அவனை வெளியே அனுப்புங்கள். இல்லையென்றால் நாங்கள் அத்தனை பேரும் வெளியே போய் விடுகிறோம்” இப்படித்தான் அந்த விண்ணப்பத்திலே எழுதியிருந்தார்கள். குரு அந்த விண்ணப்பத்தை வாங்கிப் படித்தார். அதன் பின்பு அதை எழுதின அத்தனை பேரையும் கூப்பிட்டார்.

எல்லோரும் இப்படி வாருங்கள் என்றார். வந்தார்கள். இப்படி என் எதிரிலே உட்கருங்கள் என்றார். உட்கார்ந்த பின்பு சொன்னார்... இதோ பாருங்கள் நீங்கள் எல்லாரும் புத்திசாலிகள். உங்களுக்கு எது நல்லது, எது கெட்டது எங்கிறது நல்லாத் தெரியும்.

நீங்கள் மேற்கொண்டு ஏதாவது படிக்க வேண்டும் என்று நினைத்தால் வேறு எங்கே வேண்டும் என்றாலும் போகலாம். அதுக்கு நான் தடை சொல்ல மாட்டேன்.

ஆனால் உங்களாலே குற்றம் சாட்டப்பட்ட அவன் எப்படியென்றால் அவனுக்கு எது நல்லது, எது கெட்டது என்கிறதெல்லாம் தெரியாது. அதனாலே தான் திருடினான். நீங்கள் சொல்லுறது மாதிரி அவனை அடித்துத் துரத்தி விடுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவனுக்கு எப்படி நல்லது கெட்டது தெரியும்? அவனுக்கு அதை யார் சொல்லிக் கொடுக்கிறது? அதனால் இங்கேயே இருக்கட்டும் அது தான் சரி.. இதுக்காக நீங்கள் எல்லோரும் என்னை விட்டுப் போனாலும் சரி... அவனை நான் விரட்ட மாட்டேன் என்றார்.

இவ்வளவையும் திருடிய அந்த சீடன் கேட்டுக் கொண்டே இருந்தான். அவன் கண்களில் கண்ணீர். அப்படியே வழிந்து வந்துதான். குருவின் காலிலே விழுந்தான். அவன் கண்ணீரில் அவனது தீமை கழுவப்பட்டது. சீடர்களுக்குக் குருவின் பெருமை புரிந்தது. ஒரு ஆசிரியர் இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். நல்லா படிக்கின்ற பையனுக்குத் தான் பாடம் சொல்லிக் கொடுப்பேன் என்றால்...அது ஒரு பெரிய விடயமா? மோசமாக படிக்கிறவனையும் மாற்றிக் காட்டுகின்றேன் என்பது தான் பெருமை.

இந்தக் காலத்து குரு ஒருத்தர் ஒரு ஆசிரமம் வைத்து நடத்திக் கொண்டு வந்தார். நிறைய பேர் தினம் வருவார்கள், போவார்கள். ஒரு நாள் ஒருத்தன் வந்தான். அந்த குரு முன்னால் போய் நின்றான். ஐயா... என்னை உங்கள் சீடனாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றான். அந்த குரு நிமிர்ந்து பார்த்தார். உன்னுடைய நோக்கம் என்ன? என்று கேட்டார்.

ஐயா உங்களிடம் கொஞ்ச நாள் இருந்தேன் என்றால்.. நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொள்ளலாம்.. அதன் பிறகு வெளியிலே போய் ஒரு நல்ல தொழில் தொடங்கி வாழ்க்கையிலே முன்னுக்கு வரவேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம் என்றான்.

நீ சொல்வது சரி... ஆனால் உன்னால் இங்கே நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக்க முடியவில்லை என்று வைத்துக் கொள்... அப்பொழுது என்ன செய்வாய்? என்றார் அவர். அப்படி ஆகிவிட்டது என்றால்... உங்களை மாதிரியே ஒரு ஆசிரமம் ஆரம்பித்து அதற்குக் குருவாக இருந்துவிடப் போகின்றேன் என்றான்..

# JOB வேலை வாய்ப்புகள்

## பணிப்பாளர் பதவி

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் (மு.ப.நி) பணிப்பாளர் பதவிக்கு பொருத்தமான தகைமையுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மு.ப.நிறுவகமானது பல்கலைக்கழங்கள் சட்டத்தின் கீழான கட்டளைச்சட்டத்தினால் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட உயர் கற்றல் நிறுவனமொன்றாக தாபிக்கட்டது. சுய நிதியிடல் நிறுவனமொன்றாக செயற்படுகின்ற அதன் பிரதான பணிகளாக அதன் பல்வேறுபட்ட முகாமைத்துவ, நிருவாக கற்கைகளின் துறைகளில் பட்டப்பின்படிப்பு அறிவுருத்துகை, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றை வழங்குவதனூடாக இலங்கையில் முகாமைத்துவத் துறையில் உயர் கல்வி, தொழில்வாண்மைத்தன்மை என்பவற்றை மேம்படுத்துவதாகும். பணிப்பாளர் நிறுவனத்தின் தலைவராக இருப்பதோடு, அவர் கல்விசார் மற்றும் நிருவாக தொழிற்பாடுகள் ஆகிய இரண்டுக்கும் பொறுப்புடையவராவார்.

பணிப்பாளரானவர் நிறுவகத்தின் முழுநேர அலுவலராக இருப்பதோடு அவரே பிரதம நிறைவேற்று அலுவலராகவும், பிரதம கல்விசார் அலுவலராகவும் கணக்கீட்டு அலுவலராகவும் இருப்பார். இப்பதவிக்கான மிகப் பொருத்தமான விண்ணப்பதாரி முகாமைத்துவம் மற்றும் நிருவாகத்துறையில் மிகச் சிறந்த கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகளையுடைய மிகச்சிறந்த கடந்தகால அடைவுகள், ஒழுக்கவியல் மற்றும் சமூக பொறுப்புடமை மற்றும் தொடர்புடைய துறைகளின் விருத்திக்கான பங்களிப்புகளுடன் கூடிய ஒரு கீர்த்திமிக்க நபராகவிருப்பார். நிறுவகத்தின் தலைமை அதிகாரி என்றவகையில் அவர் உயர்தரத்திலான முகாமைத்துவக் கல்வி, ஆராய்ச்சி என்பவற்றுக்கும் குறிப்பாக 21 ஆம் நூற்றாண்டில் நாட்டின் தேவைகளை அங்கீகரித்து தலைமைத்துவத்தை வழங்கக்கூடிய ஆற்றலையும் கொண்டிருத்தல் வேண்டும். பணிப்பாளர் முன்னதாக தனது பதவியை துறந்தால் அல்லது கட்டளைச்சட்டத்தின் நியதிகளுக்கமைய நீக்கப்பட்டாலொழிய நியமனத் திகதியிலிருந்து தொடராக மூன்று வருட காலங்களுக்கு அல்லது அறுபத்தைந்து வயதை பூர்த்திசெய்யும் வரை எது முன்னதாக இடம்பெறுகின்றதோ அதுவரை பதவி வகிப்பார். விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது 63 இற்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்படல் வேண்டும்:-

1. பிறந்த திகதி உள்ளிட்ட விண்ணப்பதாரியின் பூரணமான சுய விபரப் பத்திரம்.
2. நிறுவகத்தின் அபிவிருத்திக்கான நோக்கு பற்றிய கூற்றும் அவர் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் அவர்/அவள் அடைவதற்கு உத்தேசிக்கின்றவை பற்றிய ஒரு சுருக்க விபரம்.
3. அவர் பெயர்குறிப்பிடப்படும் பட்சத்தில் பெயர்குறிப்பிடப்படுபவரிடமிருந்து பெறப்படும் ஒரு இணக்கப்பாட்டு கடிதம்.
4. விண்ணப்பதாரி/பெயர்குறிப்பீடு செய்யப்படுபவர் பகிரங்க சேவையொன்றில், கூட்டுத்தாபனமொன்றில் நியதிச்சட்ட சபையொன்றில் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றில் சேவைபுரிபவராயின் குறித்த பதவிக்கு அவரை/அவளை நியமிக்கும் பட்சத்தில் விண்ணப்பதாரியை/ பெயர்குறிப்பிடப்படுபவரை விடுவிக்கமுடியும் எனத் தெரிவித்து தொழில்வழங்குனரிடமிருந்தான வழங்கப்படும் கடிதம்.

கட்டளைச்சட்டத்தின் பிரகாரம், பதவிக்கான நியமனமானது மூன்று வருட காலங்களுக்கு உரியதாகும். இப்பதவிக்கான சம்பளம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றுநிருப இல. 17/2016 இற்கு அமைவானதாக இருக்கும். போக்குவரத்து வசதிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தாபன சுற்றுநிருப இல. 13/2015 இன் பிரகாரம் வழங்கப்படும். மேலும் பதவிக்கு உரித்தான, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகளும் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள்/பெயர்குறித்தல்கள் 2020 நவம்பர் மாதம் 30 ஆம் திகதி பி.ப.3.00 மணியளவில் அல்லது அதற்கு முன்னர் *"சிரேட்ட உதவிப் பதிவாளர், முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம், இல. 28, லெஸ்லி ரணகல மாவத்தை, கொழும்பு, 08"* என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட முடியும் அல்லது நேரடியாக கையளிக்கப்பட முடியும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

ஜயந்த ரணபுர
*சிரேட்ட உதவிப் பதிவாளரும் முகாமைத்துவ சபை செயலாளரும்*
2020 நவம்பர் 02 ஆம் திகதி

PIM Postgraduate Institute of Management
*University of Sri Jayewardenepura*

28, Lesley Ranagala Mawatha, Colombo 8, Sri Lanka.
Tel: +94 11 2 689 639
Fax: +94 11 2 689 643
Web: www.pim.sjp.ac.lk
E-mail: admin@pim.sjp.ac.lk

---

சுகாதார அமைச்சு,

**மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் மற்றும் துணை மருத்துவ சேவையின் பயிற்சிகளுக்கு பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்தல் -2019**

சுகாதார அமைச்சின் மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் மற்றும் துணை மருத்துவ சேவையின் கற்கை நெறிகளுக்காக பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் மருந்தாளர், தொழில்சார் சிகிச்சையாளர், கதிரியலாளர் ஆகிய கற்கை நெறிகளின் நிறைகாண் தொழில் வல்லுநர்களின் சேவைக்கான விண்ணப்பங்களும், பாடசாலை பற்சிகிச்சையாளர், சுகாதார பூச்சியியல் அலுவலர் கண் தொழில்நுட்பவியலாளர், செயற்கை அவயவ தொழில்நுட்பவியலாளர், பொதுச் சுகாதார பரிசோதகர், இதயதுடிப்பு பதிவாளர், மூளை மின் இயக்க பதிவாளர், பல் தொழில்நுட்பவியலாளர், பொதுச் சுகாதார ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர் ஆகிய கற்கை நெறிகளுக்கான துணை மருத்துவ சேவைக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன.

மேற்படி கற்கை நெறிகளுக்கான தகைமைகள் மற்றும் மேலதிக விபரங்களுக்கு **w.w.w.health.gov.lk** எனும் இணையத்தளத்தை பார்வையிட முடிவதோடு இக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களை அவ் இணையத்தளமூடாக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

மேலும் விண்ணப்பங்களை 30.11.2020 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

# தனிமைப்படுத்தல் சட்டம்; மீறினால் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவி வருகின்ற நிலையில் வீதிகளின் இருபகுதிகளிலும் அல்லது மூடப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களுக்கு அருகில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டத்திற்கு கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார். (நி-4)

# ஐ.தே.க. தலைமைத்துவப் பதவிக் கனவைக் கலைத்தது மைத்திரியே



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் கலைக்கப்படாவிடின், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை நானே பொறுப்பேற்றிருப்பேன் எனத்தெரிவித்துள்ள அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க, என்னுடைய அந்த ரம்மியமான கனவை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே கலைத்து விட்டார் எனத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கான சகல தகுதியும் தன்னிடம் உள்ளதெனத் தெரிவித்துள்ள அவர், அதனை நான் தற்போது வெளிப்படையாக கூறப் போவதில்லை என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அடுத்தபடியான மூத்த தலைவராக தானே இருக்கின்றேன். இரண்டு தசாப்தங்களாக வகித்த ப்ாராளுமன்ற உறுப்புரிமை பறிபோனது கவலையளிக்கிறது.

தன் மீது சேறு பூசப்பட்டதன் விளைவாகவே தனது பாட்டனாரும்தந்தையாரும் வெற்றி கொண்ட பகுதியில் தன்னால் தேர்தலில் வெற்றி கொள்ள முடியவில்லையெனத் தெரிவித்த அவர், ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபட்டமையால், கட்சியின் ஆதரவாளர்கள் சுமார் இரண்டு மில்லியன் பேர் வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்லாமலேயே இருந்து விட்டனர் என்றார்.

கடந்த பாராளுமன்ற தேர்தலில், குறைந்தபட்சமாக 15 ஆசனங்களையாவது ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக்கொள்ளும் என்ற எதிர்பார்ப்பிலேயே தனித்து போட்டியிட்டதாக தெரிவித்த அவர், மீண்டும் ஒரு முறை கட்சி மாறும் எண்ணம் தனக்கில்லை என்றார்.

கட்சி பிளவுபடுவதை விரும்பாததால் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து செல்லும் தீர்மானத்தை எடுக்க வேண்டாமென சஜித் பிரேமதாஸ விடம் கேட்டுக்கொண்டிருந்தேன் எனத் தெரிவித்த அவர், அத்துடன், கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ளுமாறு தானே முதன்முதலாகக் கோரிக்கை விட்டிருந்தேன் என்றார்.

ஐ.தே.கவுக்கு தலைவராகும் ஆசை தனக்குள்ளது. கட்சியின் யாப்பின் பிரகாரமும் விதிமுறைகளுக்கு ஏற்பவும், ரணில் விக்கிரமசிங்க, விலகினால் அக்கட்சியின் பிரதித் தலைவருக்கே தலைமைத்துவம் வழங்கப்பட வேண்டும். ஆகையால், சஜித்தை எட்டி உதைத்து தள்ளிவிட்டு, தலைமைத்துவதை அடைவதற்கு எவரும் விரும்பியிருக்கவில்லை எனத் தெரிவித்தார். (நி-4)

# தூசு துகள்களின் செறிவு அதிகம் சுவாச நோயாளிகள் அவதானம்

(கொழும்பு)

நாட்டின் வளிமண்டலத்தில் தூசு துகள்களின் செறிவு அதிகரித்துள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

தென் மாகாணம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தூசு துகள்களீன் செறிவு அதிகரித்துள்ளதாக ஆய்வு நிறுவகத்தின் சிரேஷ்ட நிபுணர் பேராசிரியர் சரத் பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் வளி மாசடைதல் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு அண்மித்த நாடான இந்தியாவில் ஏற்பட்ட வளி மாசடைவு மற்றும் நாட்டின் வளிமண்டல எல்லைப் பகுதியில் ஏற்பட்ட மாசடைவு ஆகியன இதற்கு தாக்கம் செலுத்தியுள்ளதாகவும் பேராசிரியர் சரத் பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

தூசு துகள்களின்செறிவு 100 முதல் 150 ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால்சுவாச நோயாளர்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (நி-4)

# காலவரையறையின்றி மூடல்

(கொழும்பு)

ஹொரணை குருகொட பகுதியில் அமைந்துள்ள ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றிய மேலும் 19 ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப் பட்டதை அடுத்து அந்த நிறுவனம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

இந் நிறுவனத்தில் சுமார் 6 ஆயிரம் ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். அண்மையில் 20 ஊழியர்களுக்கு பி.சி. ஆர். பரிசோதனை நடத்தப்பட்டது.

இதன்போது முதன் முறையாக புளத்சிங்களவில் வசிக்கும் ஒரு பெண் கொரோனா நோயால் பாதிக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து குறித்த ஆடைத் தொழிற்சாலையின் 145 ஊழியர்களுக்கு நடத்தப்பட்ட பி.சி. ஆர்.சோதனை முடிவுகளின்படி, மேலும் 19 ஊழியர்கள் கொரோனா நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஹொரணை சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

இந்த காரணத்தினால் நேற்று திறக்க திட்டமிடப்பட்டிருந்த தொழிற்சாலை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# கடல் புறா
## கண்கள் பெற்ற பயன்




காஞ்சனாதேவி மெள்ள நகைத்தாள். அந்த நகைப்பு கருணாகர பல்லவனை இக உலகத்துக்குக் கொண்டு வரவே மெள்ள அவன் கேட்டான், "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று.

அவள் மீண்டும் நகைத்தாள். அந்த நகைப்பு அவனுக்குச் சற்றுக் கோபத்தைக் கொடுக்கவே, "பதில் சொல்லி விட்டு நகைத்தால் நன்றாயிருக்கும்" என்று கடுமையாகச் சொன்னான்.

மேல் ஸ்தாயியில் மிக மிருதுவாகச் சுண்டப்பட்ட வீணையின் நாதம்போல் வெளிவந்த அவள் பதில், "பதில் சொல்லலாம்..." என்று.

"பின் ஏன் சொல்லவில்லை?" காதுக்குள் இரகசியமாக ஓதினான் அவன்.

அவன் மார்பிலிருந்து அவள் முகத்தாமரை அவன் முகத்தை நோக்கியது. "கேள்வி சரியில்லை" என்று உதடுகள் இருமுறை திறந்து மூடின.

"கேள்வி சரியில்லையா?"

"ஆம்."

என்ன கேட்டேன்?"

"ஏன் சிரிக்கிறீர்கள் என்று கேட்டீர்கள்?"

"அதில் தவறென்ன?"

"சிரிக்கிறீர்கள் என்பதில் மரியாதை கலந்திருக்கிறது."

"ஏன் மரியாதை கூடாதா?"

"கூடும் மற்றக் காரியங்களிலும் மரியாதை காட்டப் பட்டால்."

"என்ன மரியாதை காட்டவில்லை நான்?"

"இந்த நிலை மரியாதைக்கு அறிகுறியா!"

"தேவி! நான்..."

"ஊஹூம். தவறு தவறு" என்று சிரித்தாள் அவள்.

"காஞ்சனா!"

"அதுதான் சரி" என்றாள் அவள்.

"எது?"

"அழைத்த முறை."

அவன் புரிந்துகொண்டான். புரிந்தும் விழித்தான். "என்ன விழிக்கிறீர்கள்? இன்னும் புரியவில்லையா? கண்ணில்லையா உங்களுக்கு?"

"கண்கள் இருக்கின்றன. ஆனால் பயனில்லை."

"ஏன்?"

"உன்னைக் காண இந்த இரு கண்கள் போதாது."

"நம் இருவர் கண்களும் பயன் அற்றவை" என்றாள் அவள்.

அவள் சொன்னதன் பொருள் வேறு. ஆனால் கிடைத்த பொருள் வேறு. ஏனென்றால் அத்தனை விளக்கொளியிருந்தும், குடிசைக் கதவின் மூலம் ஓசைபடாமல் உள்ளே நுழைந்து கதவை மெள்ளச் சாத்திவிட்டு அதன் குறுக்கே உருவிய வாளும் கையுமாக நின்றுகொண்ட ஓர் உருவத்தை அந்த இருவருமே கவனிக்கவில்லை.

### அரபு நாட்டு அமீர்

காதலின் பிணைப்பிலும் உணர்ச்சி வெள்ளத்திலும் சிக்குண்டு பூலோகத்தை அறவே மறந்து சொர்க்கலோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த கடாரத்துக் கட்டழகியும், பல்லவகுல இளவலும் குடிசைக் கதவைத் திறந்து கொண்டு மனிதனொருவன் உள்ளே நுழைந்து கதவை மூடி உருவிய வாளும் கையுமாக நின்றதை அணுவளவும் கவனிக்காமல் ஒருவரையொருவர் மட்டுமே கவனித்த வண்ணம் நீண்ட நேரம் ஏதும் பேசாமல் நின்றிருந்தார்கள்.

அந்த நிலையில் காதல் அந்த இருவருக்கிடையே கிளப்பி விட்ட சங்கடத்தை விட அதைக் கவனித்த அந்த மூன்றாம் மனிதன் சங்கடம் பெரிதாயிருக்கவே, அவர்களைக் காதல் வானத்திலிருந்து பாலூர்ப் பெருந்துறை மண்ணுக்கு இழுக்க, அவன் பலமுறை தன் தொண்டையைப் பலமாகக் கனைத்தான்.

அந்தக் கனைப்பின் ஒலியால் இவ்வுலகத்துக்கு வந்துவிட்டாலும், இருந்த குடிசைக் கோடியை விட்டு மட்டும் நகராமல், குடிசைக் கதவுக்கருகே நின்ற அந்தப் புதுமனிதனை யாரென்று இருவரும் ஏறெடுத்து நோக்கினார்கள்.

வந்த மனிதனின் கோலமே பெரும் விந்தையாயிருந்ததைக் கவனித்த இளைய பல்லவன், அவன் எந்த நாட்டான் என்பதைக் கூட நிர்ணயிக்க முடியாமல் திணறினான்.

அவனது கொழுத்த கன்னங்களும், உதடுகளும் சிவந்த கண்களும் அவன் அராபியன் என்பதைத் தெளிவுபடுத்தினவென்றாலும், நீளமாக இரு பக்கத்திலும் வளர்ந்த உதடுகளின் கோடியில் நீளமாக மடிந்த மீசை மட்டும் சீனத்தவர் மீசையைப் போலிருந்தது.

மேல் உடையும், கால் உறையும் அராபியர் அணிவதைப் போலிருந்தாலும் அவன் அணிந் திருந்த தொப்பி சதுரமாய் சீனர்களின் தொப்பியைப் போலிருந்தது.

சீனர்களைப்போல் அவன் குள்ளமில்லை. நல்ல உயரம், பருமன், அவன் இடைக்கச்சை மேல் நாட்டினர் அணியும் கச்சையைப் போல் கெட்டித் தோலால் செய்யப்பட்டிருந்தன்றி, அந்தக் கச்சையில் அவன் கையில் பிடித்திருந்த வாள் தொங்குவதற்கு அமைக்கப்பட்டிருந்த இடத்தைத் தவிர இன்னும் இரு குருவாள்களைச் செருகிக் கொள்ளவும் இடமிருந்தது. பாதி சீனர் உடையிலும், பாதி அராபியர் உடையுமாகக் கலந்து அணிந்திருந்த அந்த மனிதனைச் சில விநாடிகள் ஆராய்ந்த இளைய பல்லவன், "யார் நீ? இங்கு எதற்கு வந்தாய்?" என்று வினவினான்.

அவன் கேள்வியைத் தொடுத்த அந்த சில விநாடிகளில் காஞ்சனாதேவி சரேலெனப் பின்னுக்கு அடைந்து குடிசைக் கோடியில் சாத்தியிருந்த தனது வாளை எடுத்துக் கொண்டாள். அதைக் கண்ட அந்த மனிதன் பெரிதாக நகைத்தான்.

அந்த நகைப்பினால் கோபத்தின் வசப்பட்ட காஞ்சனாதேவி, "எதற்காக நகைக்கிறாய்?" என்று சீறினாள்.

"பெண்ணே! நீ வாளை எடுத்ததைக் கண்டு சிரித்தேன்" என்று அவன் கூறி மறுபடியும் ராஷஸத்தனமாகப் பெரிதாக நகைத்தான்.

"உன் கை வாள் என் வாளை விடப் பலமுள்ளதென்று நினைக்கிறாயா?" என்று அவள் வினவினாள் ஆத்திரத்துடன்.

"பலமுள்ளதுதான் பெண்ணே! ஆனால் அதற்காக நகைக்கவில்லை. உன்னையும் இந்தச் சிறுவனையும் கொல்ல நான் வாளைத் தூக்கிக் கொண்டு அங்கு வரத் தேவையில்லை. வந்து போராடவும் அவசியமில்லை.

நீங்கள் இதைவிட இன்னும் பத்து மடங்கு அதிகத் தூரத்திலிருந்தாலும் என் கச்சையிலுள்ள இந்தக் குறுவாள்களை எடுத்தெறிந்தே மாய்த்து விடுவேன்" என்று கூறித் தன் இடையிலிருந்த இரு குறுவாள்களையும் கையால் தட்டிக் காட்டினான்.

வந்தவனுடைய போர்த்திறமையைத் தீர்மானிக்கும் மனநிலையை அந்தச் சமயத்தில் பெற்றிராத இளையபல்லவன் மட்டும் அதைப் பற்றிய ஆராய்ச்சியில் நுழையாமல், "யார் நீ? இங்கு எதற்கு வந்தாய்?" என்று தன் முதல் கேள்வியை இரண்டாம் தரம் மிகப் பலத்துடனும் கண்டிப்புப் பெரிதும் தொனித்த குரலிலும் திருப்பினான்.

அந்தக் குரலில் இருந்த கண்டிப்பும், அதிகாரமும் வந்தவனுக்குச் சற்று எச்சரிக்கையை அளித்திருக்க வேண்டும். அதைக் கேட்டதும் அவன் முகத்திலிருந்து சிரிப்பு மறைந்து சிறிது குழப்பம் அதில் படரத் துவங்கியது.

அந்தக் குழப்பம் குரலிலும் ஒலிக்கச் சொன்னான் அவன், "உண்மையில் அந்தக் கேள்வியை நான்தான் கேட்டிருக்க வேண்டும்" என்று.

(தொடரும்...)

# தனிநபர்களின் தேவைகளுக்காக நாட்டை முடக்க தயாரில்லை

**(கொழும்பு)**

**சில தனிநபர்களின் தேவைகளுக்கு ஏற்றவகையில் நாட்டை முடக்குவதற்கு அரசாங்கம் தயாராக இல்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**



நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், இது நாட்டின் பொருளாதாரத்தை அழிக்க வழிவகுக்கும் என்றும் சுட்டிக்காட்டினார். கொரோனா தொற்று தொடர்பாக எதிர்க்கட்சி அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருவதாகவும், ஒரு நாட்டில் அனைத்து நடவடிக்கைகளை முடக்குவது என்பது எளிதான காரியம் அல்ல என்றும் கூறினார்.

முற்றிலும் அவசியமானதாகக் கருதப்பட்டால், ஒரு முக்கியமான கட்டத்தில் மட்டுமே நாடு முழுமையாக முடக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை அபிவிருத்தி செய்து, முன்னோக்கிக் கொண்டு செல்வார் என்கின்ற நம்பிக்கையை மக்கள் கொண்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# ஊரடங்கிலும் பிறந்தநாளுக்கு சென்று கொரோனாவை வாங்கி வந்த வைத்தியர்

(திருமலை)

திருகோணமலை பொது வைத்தியசாலையில் பணியாற்றும் மருத்துவர் ஒருவர் நோயாளர் காவு வண்டியை பயன்படுத்தி கொழும்பில் உள்ள தனது தாயாரின் பிறந்த நாளுக்கு சென்று திரும்பிய நிலையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

கொழும்பைச் சேர்ந்த வைத்தியர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் பணியாற்றி வருகிறார்.

கொழும்பு உட்பட்ட மேல் மாகாணம் முழுமையாக ஊரடங்கு அறிவிக்கப்பட்ட நிலையில், குறித்த வைத்தியர் நோயாளர் காவு வண்டியைப் பயன்படுத்தி கொழும்பில் உள்ள தன்னுடைய தாயாரின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு சென்று திரும்பியிருக்கின்றார்.

அங்கிருந்து வந்த வைத்தியர், வைத்தியசாலை விடுதியில் கொரோனா அறிகுறிகளுடன் தங்கியிருந்த நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையின் போது அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவரை கொழும்பு மஹரகமவில் உள்ள தொற்றுநோயியல் வைத்திய சாலைக்கு கொண்டு செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை அவருக்கு கொரோனா அறிகுறி காணப்பட்ட நிலையிலும் அவருடன் ஒரே அறையில் தங்கியிருக்கும் மற்றொரு வைத்தியர் திருகோணமலை பொது வைத்தியசாலையின் நோயாளர் விடுதிகளுக்கு சென்று நோயாளர்களை பார்வையிட்டு வந்திருக்கின்றார் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

அவருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

குறித்த வைத்தியருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உறுதி செய்யப்பட்டால் அது சமூகத்திற்கு கடும் அச்சுறுத்தலாக மாறும் என்று துறைசார்ந்தவர்களால் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

சமூகத்தில் கொரோனாவை கட்டுப்படுத்துவதற்காக மருத்துவத்துறை மற்றும் சுகாதாரத் துறை சார்ந்தவர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் சூழலில் ஒரு சில வைத்தியர்கள் இவ்வாறு நடந்து கொள்வது மிகுந்த வேதனையையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளன. (நி-4)

# தனிமைப்படுத்தலில் 67 ஆயிரம் பேர்

(கொழும்பு)

நாடு முழுவதும் கொரோனா தொற்று சந்தேகத்தில் இதுவரை 25 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 67 ஆயிரம் பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களில் பெரும்பாலானோர் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இந்நிலையில் தனிமைப்படுத்தல் விதி முறைகளை மீறுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (ஜ-4)

# அடுத்த கொத்தணி மதுபானசாலைகளில் உருவாகும்

(கொழும்பு)

நாட்டில் இன்னொரு கொத்தணி உருவாகும் என்றால் அது மதுபானசாலைகளிலேயே உருவாகும்.

எனவே நாடளாவிய ரீதியில் அனைத்து மதுபானசாலைகளையும் உடனடியாக மூடுமாறும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஏற்கனவே நாட்டில் மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொத்தணிகள் காணப்படுகின்றன.

இதில் கொரோனா பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# ராஜபக்ஷக்களின் ஆட்சியை மக்கள் எதிர்பார்த்திருந்தனர்

(கொழும்பு)

ராஜபக்ஷக்களின் ஆட்சி நாட்டுக்கு அவசியம் என மக்கள் எதிர்பார்த்திருந்ததாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளரும் கல்வி அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அத்துடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலத்திற்குள் மக்களின் முழுமையான ஆதரவை முழுமையாக பெற்றுள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 4 வருட நிறைவினையொட்டி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, 2015ஆம் ஆண்டு பல்வேறு நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. அரசியல் ரீதியில் பெரும்பாலானோர் தனித்து விடப்பட்டார்கள்.

ராஜபக்ஷக்களின் ஆட்சி நாட்டுக்கு அவசியம் என மக்கள் எதிர்பார்த்தார்கள். அனைவரது அபிலாசைகளையும் கருத்திற்கொண்டு பசில் ராஜபக்ஷ 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் திகதி தாமரை மொட்டு சின்னத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை ஸ்தாபித்தார்.

2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்களின் அரசியல் தீர்மானம் வெளிப்பட்டது. கட்சியை உருவாக்கி குறுகிய காலத்துக்குள் 71 ஆசனங்களை கைப்பற்றுவது சாதாரண விடயமல்ல.


அதனைத் தொடர்ந்து 2019 நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி இரட்டிப்பானது. சுமார் 69 லட்சம் மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு ஆட்சியதிகாரத்தை வழங்கி பலமான அரச நிர்வாகத்தை உருவாக்கினார்கள்.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கமசமக பிலிசதர, சுபீட்சமான எதிர்காலம் ஆகிய கொள்கை அடிப்படையில் செயற்பட்டதால் நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெற்றுக் கொண்டது.

குறுகிய காலத்தில் பொதுஜன பெரமுன மக்களாணையை முழுமையாக பெற்றுக் கொண்டுள்ளது. இது எதிர்காலத்திலும் பாதுகாக்கப்படும் என உறுதிபடத் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# ஒரே இரவில் எரிந்த இரண்டு தேவாலயங்கள்



(ஒன்ராறியோ)

கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தில் ஒரே பகுதியில் உள்ள இரண்டு தேவாலயங்கள் ஒரே இரவில் தீப்பற்றி எரிந்த நிலையில் இது சதிச் செயலாக இருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து இந்தத் தீப் பரவலுக்கான காரணங்கள் குறித்து உடனடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர், ஸ்ட்ராத்ராய்-காரடோக் - முன்சி சாலையில் உள்ள யுனைடெட் தேவாலயத்தில் தீ பற்றிய சம்பவம் முதலில் பதிவானது. அவசரக் குழுவினர் அங்கு விரைந்து தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

இந்தத் தேவாலயம் தீயில் எரிந்து பலத்த சேதமைடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சிறிது நேரத்தில் சுமார் 7 கிலோமீற்றர் தொலைவில் உள்ள புனித ஆண்ட்ரூஸ் ஆங்கிலிகன் தேவாலயம் தீ பற்றி எரிவதாக அவசரக் குழுவுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இங்கு பற்றிய தீயைக் கட்டுப்படுத்த தீயணைப்புத் துறை கடுமையாக முயற்சி செய்தது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக பெருமளவு பகுதிகள் தீயில் எரிந்துவிட்டதாக தீயணைப்புத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த தீப்பரவல் சம்பவங்கள் தொடர்பான ஆரம்பகட்ட விசாரணைகளை நாங்கள் முன்னெடுத்துள்ளோம். இந்தச் சம்பவத்துக்குக் காரணமான வழிகள் குறித்து ஆராய்ந்து வருகிறோம் என பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு தேவாலயங்களில் அடுத்தடுத்து தீ பரவல் ஏற்பட்டது மிகவும் சந்தேகத்துக்குரியது எனவும் பொலிஸ் அதிகாரிகள் கூறியுள்ளனர். (நி)

# பழங்குடிப் பெண்மணி வெளிவிவகார அமைச்சரானார்

(நியூசிலாந்து)

நியூசிலாந்தின் முதல் பழங்குடியினப் பெண் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சராக நேற்று நியமிக்கப்பட்டார்.



உலகின் அதி பன்மைத்துவ பாராளுமன்றை உருவாக்கும் முயற்சியின் ஒரு கட்டமாக நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் குறித்த நியமனத்தை வழங்கினார்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் நியூசிலாந்தின் முதல் பழங்குடியின பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான மயோரி பழங்குடியினத்தை சேர்ந்த நனையாஹ் மஹுட்டா எனும் பெண்மணிக்கே குறித்த பதவி வழங்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்தின் முன்னாள் வெளிவிவகார அமைச்சராக பதவி வகித்த வின்ஸ்டன் பீட்டர்ஸும் மயோரி இனத்தை பிரதிநிதித்துவப்படுத்திய நிலையில் குறித்த பழங்குடியினத்தை சேர்ந்த பெண்மணிக்கு இவ்வமைச்சு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நியூசிலாந்தின் ஊடகம் ஒன்றுக்கு தனது பதவி குறித்து கருத்து வெளியிட்டுள்ள மஹுட்டா, வெளிவிவகார விடயங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்கு தலைமை வகிப்பதற்காக தனக்கு வழங்கப்பட்டுள்ள வாய்ப்பு தனக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பான சந்தர்ப்பம் எனத் தெரிவித்துள்ளார். (நி)

# ஜேர்மனியிலும் ஊரடங்கு அமுல்

(பேர்லின்)

ஐரோப்பா முழுவதும் பல நாடுகள் ஊரடங்குக்கு திரும்புகின்றன. பிரான்ஸ், இங்கிலாந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளுடன் ஜேர்மனியும் இரண்டாவது ஊரடங்கிற்கு திரும்புகிறது.

ஜேர்மனியைப் பொறுத்தவரை, முழு ஊரடங்கு அல்ல, ஆனால், நேற்று முதல் ஜேர்மனியில், பகுதி ஊரடங்கு அமுலுக்கு வருகிறது. அது நான்கு வாரங்களுக்கு அமுலில் இருக்கும்.

ஊரடங்கின்போது, கொரோனா விதிகளின்படி, மதுபான விடுதிகள் மூடப்படும், ஆனால், உணவகங்கள் திறந்திருக்கும். என்றாலும் உணவு வாங்கி செல்வதற்கு மட்டுமே அனுமதி. கடைகள் திறக்கலாம், ஆனால், 10 சதுரமீற்றருக்கு ஒருவர்தான் நிற்க அனுமதிக்கப்படுவர்.

உடற்பயிற்சிக் கூடங்கள், தியேட்டர்கள் மூடப்பட்டிருக்கும். சுற்றுலாப்பயணிகளுக்கு ஹோட்டல்களில் அனுமதியில்லை.

கட்டடங்களுக்குள் கூடும் நிகழ்ச்சிகளில் 10 பேருக்கு அனுமதி, அதிகபட்சம் இரண்டு குடும்பத்தினர் மட்டுமே கூடலாம்.

பிரான்ஸைப் போலவே, பள்ளிகள், பகல் நேர குழந்தைகள் காப்பகங்கள் இயங்கும், முதியோர் இல்லங்களுக்கு பார்வையாளர்கள் செல்ல அனுமதி உண்டு.

இது குறித்து பேசிய ஜேர்மன் சேன்ஸலரான ஏஞ்சலா மெர்க்கல், தேசிய சுகாதார அவசர நிலையை தவிர்ப்பதற்காக, நாம் இந்த நேரத்தில் செயற்பட வேண்டியுள்ளது என்று தெரிவித்தார். (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2161

**பிரியா**

ஏம்பா உன் மனைவி 20ஆயிரம் ரூபாய்க்கு புடவை எடுத்திட்டா என்னு கவலையா இருந்தியே இப்போ நல்லா சிரிக்கிறாய்...!



இப்போ அந்த புடவையை உன் மனைவிக்கிட்ட காட்டத்தான் கொண்டு போயிருக்கா...

**கௌசி**

ஏங்க இன்னைக்கு நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க...!



என்ன புள்ள வீடு பெருக்கனுமா...!

**திவ்யன்**

உனக்கு இந்த நெக்லஸ் பிடிச்சிருக்கா செல்லம்...!



அப்போ நாளைக்கும் வந்து மறுபடியும் பார்த்திட்டு போகலாம்...!

**துஷ்யந்தன்**

நர்ஸ் எனக்கு காய்ச்சல் விட்டு விட்டு அடிக்குது விடாம அடிக்கிறதுக்கு அது என்ன உங்க சம்சாரமா? காய்ச்சல் அப்படித்தான் அடிக்கும்..

**துவாரகா**

தம்பி இது கொரோனா பூமி இங்கு போன் பண்ண லவ் சோங் வராது



லொக்கு லொக்குன்னு இருமிற சத்தம் தான் கேட்கும்...!


**கஜிபன்**

ஆயிரம் உறவுகள் எம்முடன் இருந்தாலும் நீ அன்னையை மட்டும் இழந்தால் 100 வீதம் ஆனாதை தான்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அத்தியாவசியப் பொருட்கள் வீடுகளுக்கு விநியோகிக்கும் பணி ஆரம்பம்



(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள மக்களுக்கான அத்தியாவசிய பொருட்களை வீடுகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமானது.

பொலிஸ் நிலையங்களில் இதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் பிரதேச செயலகங்கள் ஊடாக மக்களின் வீடுகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக களுத்துறை மாவட்ட செயலாளர் பிரசன்ன கினிகே தெரிவித்துள்ளார்.

இதற்காக பல வர்த்தகர்கள் பதிவு செய்துள்ளதாகவும் கொழும்பு மாவட்ட செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்தார்.

மேலும் கம்பஹா மாவட்டத்திலும் பிரதேச செயலாளர் அலுவலகம் ஊடாக பொருட்கள் விநியோகிக்கப்படவுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

தமிழ் நாட்டில் உள்ள பழமை சிறப்புமிக்க ஆலயங்களுக்கு சென்றால் நம்மை முதலில் வரவேற்பது இராஜகோபுரம்.

வாகனங்களில் சென்றாலும் சரி நடந்து சென்றாலும் சரி சில கிலோ மீற்றர் தொலைவுக்கு முன்பே இராஜகோபுரம் கம்பீரமாக தோன்றி நம்முள் இறை உணர்வை ஏற்படுத்திவிடும். நம்மையும் அறியாமல் நாம் இராஜகோபுரத்தை நோக்கி கை தூக்கித் தொழுவோம்.

ஆனால் கோவிலை நெருங்கியதும் பெரும்பாலானவர்கள் இராஜகோபுரத்துக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை கொடுப்பதில்லை. கடைசி நிமிடத்தில் புகையிரதத்தைப் பிடிக்க நடைமேடைக்கு ஓடுபவர்கள் போல வேகவேகமாக கோவிலுக்குள் சென்று விடுவார்கள்.

இனி அப்படி செய்யாதீர்கள். இராஜ கோபுரத்துக்கு என்று ஆகம விதிகளும் ஐதீகங்களும் ஏராளமாக உள்ளன. அவற்றைத் தெரிந்து கொண்டு கோபுரத்தை வழிபாட்டால் நம் வாழ்க்கையும் வான் உயர்ந்த கோபுரமாக உயரும். பொதுவாகவே இராஜகோபுரத்தை கண்டதுமே கைகூப்பி வணங்க வேண்டும் என்பது விதியாகும்.

ஆலயங்களில் இராஜகோபுரம் கட்டுவது என்பது ஆயிரம் அல்லது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியதல்ல. அதற்கும் முன்பே தோன்றிவிட்டது. அதற்கு சங்ககால இலக்கியங்களில் ஏராளமான உதாரணங்கள் உள்ளன.

சங்ககால கட்டத்தில் பெரும்பாலான ஆலயங்கள் குன்றுகள், மலை உச்சிகளில் தான் இருந்தன. தொலைவில் இருந்து பார்க்கும் போது தலை உயர்த்தி, கைகூப்பி அந்த ஆலயங்களை மக்கள் தொழுதனர்.

நாகரிக மாற்றத்துக்குப் பிறகு ஊர்களில் ஆலயங்கள் கட்டப்பட்டபோது தலை உயர்த்தி, கைகூப்பி வணங்கும் பழக்கத்தை மக்கள் மறந்து விடவில்லை. இதைக் கருத்தில் கொண்டே கோவில்களில் கோபுரங்கள் கட்டும் புதிய நடைமுறை ஏற்பட்டது. உயரமான கோபுரங்களைப்பார்க்கும் போது பணிவு வரும். ஆணவம் நீங்கும். வாழ்வில் நாம் உயர வேண்டும் என்ற எண்ணம் வரும்.

முதலில் கருவறை மீது உயர்ந்த கோபுரங்கள் கட்டப்பட்டன. பிறகு தமிழர்களிடம் ஏற்பட்ட பண்பாடு மாற்றம் காரணமாக கருவறைக்கு நேர் எதிரில் சுற்றுச்சுவர் வாசலில் கோபுரம் கட்டத் தொடங்கினார்கள்.

அன்று முதல் கருவறை மீது கட்டப்படுவது விமானம் என்றும் நுழைவாயில் பகுதியில் கட்டுவது இராஜகோபுரம் என்றும் அழைக்கப்பட்டது. கருவறை மீது கட்டப்பட்ட கோபுரம் மெல்ல மெல்ல நகர்ந்து வெளிவாசல் வரை வந்து விட்டதற்கு வேறு பல காரணங்களும் கூறப்படுகின்றன.

கோபுர வாசலைப் பொறுத்தவரை ஆலய மூலவர் எந்தத் திசையை நோக்கி அமைந்திருக்கிறாரோ அந்தத் திசையில் இராஜகோபுரம் கட்டப்பட வேண்டும் என்பது ஆகம மரபாகும். இதை அடிப்படையாகக் கொண்டே இராஜகோபுரத்தை "பரமந்திர மத்ய கபால துவாரம்" என்று யோகிகள் கூறினார்கள். இறைவனின் "விராட் ஸ்வரூபமே" கோபுரம்.

நவக்கிரகங்களில் இருந்து தினமும் பூமிக்கும் அதிர்வலைகள் பாய்ந்து வருவதையும் மழைக் காலங்களில் வானில் இருந்து இடி, மின்னல் போன்ற சீற்றம் ஏற்படுவதையும் கண்ட நம் மூதாதையர்கள் அவற்றில் இருந்து ஆலயத்தையும் ஊரையும் தற்காத்துக் கொள்ள கோபுரங்களை சக்திமிக்கதாக மாற்றினார்கள். பிறகு பிரபஞ்சம் முழுக்க நிரம்பியுள்ள சக்தியை இழுக்கும் ஆற்றல்மிக்கதாக கோபுரம் மாறியது.

நம் மூதாதையர்கள் கட்டட, சிற்ப விதிகளின்படி இராஜகோபுரத்தை கீழ்ப் பகுதி, மேல் பகுதி எனும் இரு பகுதிகளாகக் கட்டினார்கள். கீழ்ப்பகுதியில் உபபீடம், அதிட்டானம், சுவர், கூரைக்கான தொடக்கம் ஆகியவை இருக்கும். மேல் பகுதியில் கர்ண கூடு, கூரை, கண்டம், சிகரம், கலசம் ஆகியவை உள்ளன. இராஜகோபுரத்தை கீழ்ப்பகுதி கருங்கற்களாலும் மேல் பகுதி செங்கல் சுதைகளாலும் கொண்டு கட்டப்படும்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் ஊழியருக்கு கொரோனா

(கொழும்பு)

ஸ்ரீலங்கா இன்சூரன்சின் யூனியன் பிளேஸ் அலுவலகத்தை சேர்ந்த ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனம் இதனை அறிவித்துள்ளது. மேலும், அவருடன் நெருங்கிய தொடர்பின்ன பேணியவர்களை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் மறு அறிவித்தல் வரை குறித்த அலுவலகம் மூடப்பட்டிருக்கும் என ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதேவேளை, பொறளை பொலிஸ் நிலையத்தில் மேலும் 8 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகளில் 10 பேரில் 8 பேருக்கு இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)

## துப்பாக்கிச்சூடு;ஒருவர் காயம்

(கதிர்காமம்)

கதிர்காமம் - கட்டகமுவ பகுதிக்கு அருகில் விலங்குகளை வேட்டையாடுபவர்களுக்கும் வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையில் துப்பாக்கிப்பிரயோகம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது விலங்குகளை இறைச்சிக்காக வேட்டையாடுபவர்களில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் விலங்கு வேட்டையாளர்களால் இரு மான்கள் இறைச்சிக்காக வேட்டையாடப்பட்டுள்ளதாகவும் வனவள ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 140 | 100 |
| உருளைக்கிழங்கு | 150 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 140 |
| தக்காளி | 120 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 |
| கோவா | 100 | 100 | 120 |
| கரட் | 180 | 180 | 160 |
| பூசணி | 40 | 50 | 60 |
| புடோல் | 120 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200-220 | 240 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 160 |
| பாகற்காய் | 260 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 90 | 100 | 120 |
| பயற்றங்காய் | 150 | 120 | 160 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 |
| பீற்றூட் | 90 | 80 | 80 |
| கறிமிளகாய் | 260 | 180 | 240 |
| முருங்கைக்காய் | 150 | 150 | 200 |
| போஞ்சி | 200 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 70 | 140 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 30-40 | 50 |
| தேசிக்காய் | 200 | 200 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 300 | — | 320 |
| வெங்காயப்பூ | — | — | — |
| முள்ளங்கி | 60 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 35 | 50 | 40 |
| வல்லாரை | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 100 | — | — |



# சிறுவர் அரங்கம்

## நிறையா? குறையா?



ஒரு கிராமத்தில் ஒரு ஏழை வாழ்ந்து வந்தான். அவன் தினமும் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வருவான். தண்ணீர் எடுத்து வர அவன் இரண்டு பானைகளை வைத்திருந்தான்.

இரண்டு பானைகளில் ஒன்றில் சிறிய ஓட்டை இருந்தது. அதனால் ஒவ்வொரு நாளும் வீட்டிற்கு வரும் பொழுது. குறையுள்ள பானையில் பாதியளவு நீரே இருக்கும்.

குறையில்லாத பானை குறையுள்ள பானையைப் பார்த்து எப்பொழுதும் அதன் குறையைக் கிண்டலும் கேலியும் செய்து கொண்டே இருக்கும்.

இப்படியே இரண்டு வருடங்கள் ஆனது. கேலியைப் பொறுக்க முடியாத பானை அதன் எஜமானனைப் பார்த்து "ஐயா! என் குறையை நினைத்து நான் மிகவும் கேவலமாக உணர்கிறேன். என் குறையை நீங்கள் சரி செய்யுங்களேன்"

"பானையே! நாம் வரும் பாதையில், உன் பக்கம் இருக்கும் அழகான பூச்செடிகள் வரிசையைக் கவனித்தாயா? என்று அதன் எஜமானன் கேட்டான்.

உன்னிடமிருந்து தண்ணீர் சிந்துவது எனக்கு முன்னமே தெரியும். அதனால் தான் வழி நெடுகில் பூச்செடி விதைகளை விதைத்து வைத்தேன்.

அவை நீ தினமும் சிந்திய தண்ணீரில் இன்று பெரிதாக வளர்ந்து எனக்கு தினமும் அழகான பூக்களை அளிக்கின்றன. அவற்றை வைத்து நான் வீட்டை அலங்கரிக்கிறேன். இறைவனுக்குப் பூஜை செய்கின்றேன். மீதமுள்ள பூக்களை விற்றுப் பணம் சம்பாதிக்கிறேன் என்று கூறினான்.

இதைக் கேட்ட பான்ன அதன் வருத்தத்தை நிறுத்தி விட்டது. அடுத்தவர் பேச்சைப் பற்றிக் கவலைப்படாமல் தன் வேலையைக் கருத்துடன் செய்யத் தொடங்கியது.

**நீதி: மற்றவர்கள் பேசுவதை நினைத்துக் கொண்டிருந்தால் நாம் நிம்மதியாக வாழ முடியாது.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## ஜீலை-26



13

ஒருநாள் அதிகாலை கர்ம சிரத்தையாக பூஜை செய்து கொண்டிருந்தான் அலெக்சாண்டர். கடவுளின் சிலைக்கு எதிரே பட்டுத்துணி போட்டு அமர்ந்திருந்தான்.

கடவுளுக்கு முன் படைப்பதற்காக சில பதார்த்தங்கள் இருந்தன. கைக்கெட்டும் தூரத்தில் அக்னி குண்டம் இருந்தது.

அதில் சாம்பிராணி புகைந்து கொண்டிருந்தது. எப்போதுமே பூஜையறை நறுமணம் கமழ்வது சாம்பிராணி புண்ணியத்தால்தான் என்பதை லியோனிடஸ் அவனுக்குச் சொல்லியிருந்தார்.

அலெக்சாண்டர் தந்தையைப் போலவே சம்மணமிட்டு அமர்ந்து பூஜை செய்தான். கடவுளை வேண்டினான்.

வலது கையால் சாம்பிராணியை ஒரு கைப்பிடி எடுத்து அக்னி குண்டத்தில் போட்டான். அடுத்த நொடி புகை பீறிட்டுக் கிளம்பியது. பூஜை அறை புகை மண்டலமாக உருமாற்றம் அடைந்தது. கண் எரியவில்லையே தவிர மற்றப்படி எதுவுமே கண்களுக்குத் தெரியவில்லை.

பூஜையறை வழியாக வந்த லியோனிடஸ் அலெக்சாண்டரின் குறும்பைக் கவனித்துவிட்டார். காதுகள் சிவக்கும் அளவுக்குக் கோபம் வந்துவிட்டது.

நேராக அலெக்சாண்டரை நோக்கி நடந்தார். நடந்து வருவது லியோனிடஸ் என்பது அவனுக்குச் சரியாகத் தெரியவில்லை. கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தான். லியோனிடஸே தான் நெஞ்சு திக்திக்கென அடித்துக் கொண்டது.

சாம்பிராணி மிகவும் விலையுயர்ந்த பொருள். பல நாடுகளைத் தன்னுடைய வீரத்தால் வென்று அதன் பலனாக இவ்வளவு சாம்பிராணியைக் கொண்டு வந்திருக்கிறார் மன்னர்.

அதன் அருமை தெரியாமல் பொறுப்பற்ற முறையில் வீணடிக்கக் கூடாது. ஒருவேளை அதிகமாக செலவு செய்து தான் பூஜை செய்ய வேண்டும் என்று விரும்பினால் நீ பெரியவனாகி நாட்டுக்கே மன்னாகி போரில் வெற்றி பெற்று சாம்பிராணியைக் கொண்டு வா, பிறகு தாராளமாகப் பயன்படுத்து.

சுருக்கென்று இருந்தது அலெக்சாண்டருக்கு. தவறு செய்தால் மாத்திரமே கடிந்து கொள்ளும் குணம் கொண்டவர் லியோனிடஸ் என்பது அலெக்சாண்டருக்கு நன்றாகவே தெரியும். அதனால் அவர் கடிந்து கொண்டதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

பாடம் என்பது வெறுமனே இலக்கண, இலக்கியங்களைக் கற்றுக் கொள்வதோடு முடிந்து விடுவதில்லை. உண்மையான பாடம் என்பது நல்ல பழக்கவழக்கங்களை வளர்த்துக் கொள்ள உதவுவது.

(தொடரும்)

உண்மை செருப்பணிந்து புறப்படுவதற்குள், பொய் உலகையே சுற்றி வந்துவிடுகிறது.

- லாங்ஃபெல்லோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொதுமக்களைக் குற்றஞ்சாட்டுவது எந்தவகையில் நியாயமாகும்?

கொரோனா பரவுகைக்கு பொதுமக்களே காரணம். அதற்கு அரசாங்கம் பொறுப்பேற்க முடியாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்து ஒரு பொறுப்பு வாய்ந்த ஜனாதிபதியினுடைய கருத்தாக இருக்க முடியாது.

பொதுமக்களால் தெரிவு செய்யப்படுகின்ற அரசாங்கம் தனக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களைப் பயன்படுத்தி பொதுமக்களையும் நாட்டையும் பாதுகாக்க வேண்டும்.

பொதுமக்களையும் நாட்டையும் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக அமுல்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

அந்த வகையில் கொரோனாத் தொற்றுப் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

இது விடயத்தில் சுகாதாரத் துறையின் ஆலோசனைகளுக்கு அமைவாக கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டங்களை அமுல்படுத்த வேண்டும்.

குறிப்பாக ஆடைத் தொழிற்சாலையில் கொரோனாத் தொற்று இனங்காணப்பட்டது என்றவுடன் மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்தை உடனடியாகத் தடைசெய்திருப்பது அவசியமானது.

எனினும் இது விடயத்தில் அரசாங்கம் மெத்தனமாக இருந்துள்ளதென்பது மறுக்க முடியாத உண்மை.

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் கொரோனாத் தொற்று இனங்காணப்பட்டது என்றவுடன் தொற்றுப் பரவுதைத் தடுப்பதற்கான அதிரடி நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருந்தால், அதன் தாக்கம் இந்தளவு தூரம் வியாபகமடைந்திருக்க மாட்டாது.

இதைவிடுத்து பொதுமக்கள் கட்டுப்பாடாக இருக்கவில்லை. அவர்கள் கொரோனாக் கட்டுப்பாட்டு நடைமுறைகளைப் பின்பற்றவில்லை.

எனவே கொரோனாத் தொற்றுப் பரவுவதற்குப் பொதுமக்களே காரணம். எனவே இது விடயத்தில் அரசாங்கம் பொறுப்பேற்க முடியாது என இந்த நாட்டின் ஜனாதிபதி கூறுவது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல.

ஏலவே கொரோனாத் தொற்றின் முதலாவது அலை ஏற்பட்டபோது அதனைத் தடுப்பதில் அரசாங்கம் காட்டிய கவனம் கொரோனா இரண்டாவது அலையின்போது, இருக்கவில்லை என்பது வெளிப்படையானது.

தவிர, இப்போதுகூட சமூகத் தொற்றாக கொரோனா பரவவில்லை என சுகாதார அமைச்சு கூறி வருகிறது.

எனினும் இலங்கையில் கொரோனா சமூகத் தொற்றாகி விட்டது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறி நிற்கிறது.

உலகையே ஆட்டிப் படைக்கும் கொரோனா தொற்றில் கூட நம் நாடு மறைப்புச் செய்கிறது எனில் இதைவிட்ட கொடுமை வேறு என்னவாக இருக்க முடியாது.

# அனைவரும் சமூகப் பொறுப்புடன் செயற்பட வேண்டும்

## வடக்கு ஆளுநர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கான தீவிர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு மாகாணத்தினுள், கடற்பரப்பின் ஊடாக அத்துமீறி நுழைபவர்களை தடுப்பதற்காக கடற்படையினர் சிறப்பு சுற்றுக்காவல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்தகைய கடலோரப் பாதுகாப்பினையும் கடந்து யாராவது அத்துமீறி உள்நுழைவார்களாயின் அல்லது உள்நுழைந்து மறைந்திருப்பார்களாயின் கரையோர வாழ் வடபிராந்திய மக்கள் உட்பட, எவராவது அருகில் உள்ள பொதுச் சுகாதார அதிகாரிகளிடத்திலோ அல்லது பொலிஸ் நிலையத்திற்கோ தகவல் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

அத்துடன் அண்மைய நாட்களில் வெளி மாவட்டங்களிலிருந்து வருகை தந்தவர்கள் தங்களைத் தாங்களே வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்குவது அவசியமாகின்றது. அதுமட்டுமன்றி அவர்களின் உடல்நிலையில் மாறுபட்ட அடையாளங்களை காணுமிடத்து உடனடியாக மருத்துவ பரிசோதனைகளுக்கு தங்களை ஈடுபடுத்துவதே பொருத்தமானதாகும்.

யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலும், பி.சி.ஆர்.பரிசோதனைகள் கிரமமாக மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே பொதுமக்கள் இயல்பான சந்தேகங்கள் ஏற்படுமிடத்து எவ்விதமான அச்சமும் அடையாது பரிசோதனைகளுக்கு தங்களை உட்படுத்திக் கொள்ள முடியும்.

இதைவிட, அனைத்து பொதுமக்களும் பொது வெளியில் நடமாடுவதை இயன்றளவில் தவிர்ப்பதுடன், முகக்கவசம் அணிதல், கை சுத்திகரிப்பு திரவத்தினை பயன்படுத்தல், சமூக இடைவெளிகளைப் பேணுதல் ஆகிய மூன்று விடயங்களையும் பின்பற்றுதலும் அவசியமானதாகின்றது.

சமூகப் பொறுப்புடன் வடக்கு வாழ் ஒவ்வொரு குடிமகனும் நடந்து கொள்வதுடன் மக்கள் கூடும் இடங்களில் பொலிஸார் மற்றும் பொதுச் சுகாதாரப் பணியாளர்கள் சிறப்புக் கவனம் கொண்டிருப்பதும் அவசியமாகின்றது. அதற்குரிய அறிவுறுத்தல்களையும் நான் வழங்கியுள்ளேன்.

மங்கல, அமங்கல நிகழ்வுகளின்போது வரையறுக்கப்பட்ட விதிமுறைகளை பின்பற்றுவது அவசியமாகின்றது. அத்துடன் அத்தியாவசியப் பொருட்களுக்கு திட்டமிட்டு தட்டுப்பாடுகளை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக பாரபட்சமின்றிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது முக்கியமான விடயமாகின்றது என தெரிவித்துள்ளார். (ஜ-4)

# கழகங்களுக்கிடையேயான போட்டிகளுக்குத் தடை

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்கள் சுற்றுப்போட்டிகளை நடத்துதல், மைதானங்களில் விளையாடுதல் போன்ற செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு கரவெட்டி பிரதேச செயலர் ஈ.தயாரூபன் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தால் சுற்றுப் போட்டிகளை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பல கழகங்கள் மின்னொளியினாலான போட்டிகளை நடத்துவதாக தெரியவந்துள்ளது.

விளையாட்டுக் கழகத்தினரின் அனுமதியின்றி சிலர் போட்டியை நடத்தினாலும் குறித்த மைதானத்தினரே பொறுப்புக் கூற வேண்டும்.

இதை மீறிச் செயற்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதோடு தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்கும் உட்படுவர் என அறிவித்துள்ளார். (5-4-60)

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2020

"எவரொருவர் மரங்களை நாட்டுகின்றாரோ, அவர் தன்னைவிட மற்றவர்களை அதிகம் நேசிப்பவராவார்."

-தோமஸ் ஃபுல்லர் (இங்கிலாந்து வரலாற்றாளர்)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## நாள் கணக்கில் சிந்தியுங்கள்

❖ அனைத்திலும் கடவுளைக் காண்பது தான் மனிதனின் லட்சியம். அனைத்திலும் பார்க்க முடியாவிட்டால், நாம் மிகவும் நேசிக்கும் ஒன்றிலாவது பார்க்க வேண்டும்.

❖ அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில்எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போது உள்ளம் சொல்வதையே நீங்கள் பின்பற்றுங்கள். ஏனென்றால் அறிவாற்றலால் ஒரு போதும் செல்லவே முடியாத மிகவும் உயர்ந்தமனநிலைக்கு, இதயம் ஒருவனை அழைத்துக் கொண்டு போகிறது.

❖ உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய இந்தமூன்றும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ, அவற்றைப் பெற்றிருப்பவர்களை நசுக்கக் கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ மண்ணுலகிலோ எங்குமே கிடையாது. இந்த மூன்றையும் பெற்றுள்ள ஒருவனைப் பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்துநிற்ககூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு.

❖ எண்ணமே நம்மில் தூண்டும் சக்தி. மனத்தை உயர்ந்த எண்ணங்களினால் நிரப்புங்கள், நாட்கணக்காகச் சிந்தியுங்கள், தோல்விகளைப் பொருட்படுத்தாதீர்கள்.

# ராஜஸ்தானை வீழ்த்தி கொல்கத்தா வெற்றி



ஐ.பி.எல். ரி-20 தொடரின் 54ஆவது லீக்போட்டியில், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 60 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

டுபாயில் நடைபெற்ற இப்போட்டியில், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியும் மோதின. இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 191 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது அணி சார்பில், சுப்மான் கில் 36 ஓட்டங்களையும் நிதிஷ் ராணா ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும், திரிபத்தி 39 ஓட்டங்களையும் நரேன் ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும் ஆட்டமிழந்தனர்.

இயன் மோர்கன் ஆட்டமிழக்காது 68 ஓட்டங்களையும், தினேஷ் கார்த்திக் ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும், ஆண்ட்ரே ரஸ்ஸல் 25 ஓட்டங்களையும், பட் கம்மின்ஸ் 15 ஓட்டங்களையும், நாகர்கோடி ஆட்டமிழக்காது ஒரு ஓட்டத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் பந்துவீச்சில், ராகுல் டிவெட்டியா 3 விக்கெட்டுகளையும், கார்திக் டியாகி 2 விக்கெட்டுகளையும், ஜோப்ரா ஆர்செர் மற்றும் ஸ்ரேயாஸ் கோபால் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 192 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணியால், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 131 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 60 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி சார்பில், ரொபின் உத்தப்பா 6 ஓட்டங்களையும், பென் ஸ்டோக்ஸ் 18 ஓட்டங்களையும், ஸ்டீவ் ஸ்மித் 4 ஓட்டங்களையும், சஞ்சு சம்சன் ஒரு ஓட்டத்தினையும், ஜோஸ் பட்லர் 35 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ரியான் பராங் ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும், ராகுல் டிவெட்டியா 31 ஓட்டங்களையும், ஸ்ரேயாஸ் கோபால் ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களையும், ஜோப்ரா ஆர்செர் 6 ஓட்டங்களையும், கார்திக் டியாகி 2 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். வருண் ஆரோன் ஓட்டமெதுவும் பெறாத நிலையில் களத்தில் இருந்தார்.

கொல்கத்தா அணியின் பந்துவீச்சில், பட் கம்மின்ஸ் 4 விக்கெட்டுகளையும், சிவம் மாவி மற்றும் வருண் சக்கரவர்த்தி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், கமலேஷ் நாகர்கோடி 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 4 ஓவர்கள் வீசி 34 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்திய பட் கம்மின்ஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் கொல்கத்தா அணி, பிளே ஓஃப் சுற்றுக்கான வாய்ப் பினை தக்கவைத்துக் கொண்டது. ராஜஸ்தான் அணி தொடரிலிருந்து வெளியேறியது. (4)

## அடுத்த தலைமுறையிடம் அணியை கொடுக்க வேண்டியுள்ளது



எங்களது ஒட்டுமொத்த அணியையும் மாற்ற வேண்டியுள்ளது என்றும் அடுத்த 10 ஆண்டுகளை கணக்கில் கொண்டு மாற்றங்களை கொண்டு வரவேண்டும் என்றும் டோனி தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் தனது கடைசி லீக் ஆட்டத்தில் பஞ்சாப் அணியை 9 விக்கெட் வீழ்த்தி ஹட்ரிக் வெற்றி பெற்றாலும், 6 வெற்றிகள் மட்டுமே பெற்றுள்ளதால், பிளே ஒப் வாய்ப்பை ஏற்கனவே இழந்துவிட்டது சென்னை சுப்பர் கிங்ஸ். இனி அடுத்த ஐ.பி.எல். சீசன்தான்.

போட்டி முடிந்த பின்னர் பேசிய டோனி, "இது மிகவும் வித்தியாசமான ஒரு சீசனாக அமைந்து விட்டது. நாங்கள் நிறைய தவறுகள் செய்து விட்டோம். கடந்த நான்கு போட்டிகளில் நாங்கள் எப்படி விளையாட வேண்டும் என்பதை காட்டி விட்டோம். எங்களுடைய வீரர்களை நினைத்தால் பெருமையாக இருக்கிறது. ஏனெனில் 7-8 போட்டிகள் தோல்வி அடைந்திருப்பது மிகவும் நெருக்கடியானது. உங்களால் கிரிக்கெட்டை மகிழ்ச்சியாக விளையாட முடியாது.

எங்களது அணியையும் மாற்ற வேண்டியுள்ளது. அடுத்த 10 ஆண்டுகளை கணக்கில் கொண்டு மாற்றங்களை கொண்டு வரவேண்டும். எங்களுக்காக 10 ஆண்டுகள் விளையாடிய வீரர்களை கொண்டு ஐ.பி.எல்.தொடரை தொடங்கினோம். அவர்கள் 10 வருடம் நல்ல ஒத்துழைப்பை கொடுத்தார்கள். இனி, அடுத்த தலைமுறையிடம் அணியை கொடுக்க வேண்டியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (4)

# பஞ்சாப் தோல்வி;சென்னை தொடர் வெற்றி

ஐ.பி.எல். ரி-20 தொடரின் 53ஆவது லீக் போட்டியில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 9 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்றுள்ளது.

அபுதாபியில் நடைபெற்ற இப்போட்டியில், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் மோதின.

இப்போட்டியில் வெற்றிபெற்றால் மாத்திரமே பிளே ஓஃப் சுற்றுக்கான வாய்ப்பினை தக்கவைக்கலாம் என்ற நிலையில், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி, ஏற்கனவே பிளே ஓஃப் சுற்றுக்கான வாய்ப்பினை இழந்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை எதிர்கொண்டது.



இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 153 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணி சார்பில், கே.எல். ராகுல் 29 ஓட்டங்களையும், மயங் அகர்வால் 26 ஓட்டங்களையும், கிறிஸ் கெய்ல் 12 ஓட்டங்களையும், நிக்கோலஸ் பூரன் 2 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மந்தீப் சிங் 14 ஓட்டங்களையும் தீபக் உதா ஆட்டமிழக்காது 62 ஓட்டங்களையும், ஜேம்ஸ் நீஷம் 2 ஓட்டங்களையும் கிறிஸ் ஜோர்தான் ஆட்டமிழக்காது 2 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பந்துவீச்சில், லுங்கி இங்கிடி 3 விக்கெட்டுகளையும், தாஹிர், ஜடேஜா மற்றும் சர்துல் தாகூர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 154 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, 18.5 ஓவர்கள் நிறைவில் 1 விக்கெட் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 9 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றது.

இதில் சென்னை அணி சார்பில், ருத்துராஜ் கெய்க்வாட் ஆட்டமிழக்காது 62 ஓட்டங்களையும், டு பிளெஸிஸ் 48 ஓட்டங்களையும், அம்பத்தி ராயுடு ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பஞ்சாப் அணியின் பந்துவீச்சில் கிறிஸ் ஜோர்தான் 1 விக்கெட்டினை வீழ்த்தினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 49 பந்துகளில் 1 சிக்ஸர், 6 பவுண்ரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 62 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட ருத்துராஜ் கெய்க்வாட் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த தோல்வியுடன் கிங்ஸ் லெவன் பஞ்சாப் மற்றும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் தொடரிலிருந்து வெளியேறியுள்ளன. (4)

## விபரீத முடிவெடு...

கொரோனா மரணமாக அறிவிக்கப்பட்ட நிலையில் அதனை மீளப் பெற்றுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

அதன்படி இலங்கையில் இதுவரை பதிவான கொரோனா மரணங்கள் 21 ஆக கருதப்படும்.

பாணந்துறையைச் சேர்ந்த 27 வயது நபரொருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்த நிலையில் அவரது உடலிலிருந்து பெறப்பட்ட மாதிரிகளை பரிசோதனை செய்ததில் அவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்தே இந்த மரணம் 22 ஆவது கொரோனா மரணமாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மேலும் 2 வாரங்...

இதற்கமைவாக 3ஆம் தவணை விடுமுறைக் காலம் மேலும் 2 வாரங்களுக்கு நீடிக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனா 3ஆவது அலை தொற்று தினமும் அதிகரித்து வரும் நிலையில் 3ஆம் தவணை பாடசாலை விடுமுறை தொடர்பில் முடிவெடுப்பதற்காக நேற்று முக்கிய கலந்துரையாடல் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் மட்டத்தில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## இந்திய தூதரக...

துள்ளது.

குறிப்பிட்ட ஊழியரின் பணி காரணமாக அவர் தூதரக அலுவலகத்துடனும் அதிகாரிகளுடனும் சிறியளவிற்கே தொடர்பிலிருந்தார் என தெரிவித்துள்ள தூதரகம், அவருடன் தொடர்பிலிருந்த மிகக்குறைந்த எண்ணிக்கையிலானவர்கள் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளது.

இலங்கையில் உருவான சூழ்நிலை காரணமாக தூதரகம் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான ஊழியர்களுடனேயே சில வாரங்களாக இயங்கி வந்துள்ளதாகவும் இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. (ம-3)

## கைவிரல் அடை...

வெளியிட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் அதிகமாக பரவி வரும் நிலையில் இவ்வாறான கைவிரல் அடையாளம் பதிவு செய்தல் தமக்கு பாதிப்பாக அமைகின்றது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், யாராவது ஒரு உத்தியோகத்தருக்கு கொரோனா தொற்று இருக்கும் பட்சத்தில் அது அனைவரையும் பாதிக்கும் எனவும் அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்படுத்தப்படும் வரை கைவிரல் அடையாளம் பதிவுசெய்யும் இயந்திரங்களை நிறுத்தி வைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-3)

## கிளிநொச்சி...

தொற்றுக்குள்ளான 3 பேரில் ஒருவர் கிளிநொச்சி கண்டாவளை - தர்மபுரம் 3ம் யுனிட் பகுதியைச் சேர்ந்தவர் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த நபர் கொழும்பிலிருந்து கடந்த 25ஆம் திகதி வீடு திரும்பிய நிலையில் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

மேலும் இருவர் முல்லைத்தீவு மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்

# நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் கொரோனா கொத்தணிகள் உருவாகும் அபாயம்

## உருவானால் எவராலும் கட்டுப்படுத்த முடியாது

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் கொரோனா கொத்தணிகள் உருவாகும் அபாயம் உள்ளதாக சுட்டிக் காட்டியிருக்கும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்,

அவ்வாறான நிலை உருவானால் எவராலும் அதனைக் கட்டுப்படுத்த இயலாத ஒரு பாரிய அபாயத்தை சந்திக்க நேரிடும் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

நாட்டில் கண்டறியப்பட்ட தொற்றாளர்கள் பெருமளவானோர் சமூகத்திலிருந்தே இனங்காணப்பட்டனர். தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து அல்ல.

இவ்வாறான நிலைமையை சீராக்குவதற்கு துரிதமான செயற்பாடுகளை முன்னெடுத்தால் மாத்திரமே எதிர்காலத்தை சிறந்ததாக்கலாம் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்க செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்தார். (ம-3)

# யாழ்.மாவட்டத்தில் குருதித் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் இரத்தத்திற்குத் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இதனைக் கருத்திற் கொண்டு அனைத்துக் குருதிக் கொடையாளர்களும் இரத்தம் வழங்க முன்வர வேண்டும். பொது அமைப்புக்கள் இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்து நடத்த முன்வர வேண்டும் என தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவுப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி ம.பிரதீபன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்து நடத்துவதில் சில நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றன.

அவற்றை எதிர்கொள்வதுடன் சுகாதார நடைமுறைகளான முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணல், கைகழுவுதல் உள்ளிட்ட விடயங்களையும் கடைப்பிடித்து இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்து நடத்த முடியும்.

தற்போது இவ்வாறான நடைமுறைகள் காரணமாக இரத்ததான முகாம்களை நடத்துவது மிகவும் குறைவடைந்து விட்டது. இதன்காரணமாகவே, யாழில் இரத்தத் தட்டுப்பாடு தொடர்ச்சியாக நிலவி வருகிறது.

இவ்வாறான நடைமுறைகளைப் பெரிதுபடுத்தாமல் உரிய அனுமதிகளைப் பெற்றுச் சுகாதார நடைமுறைகளுக்கமைய இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்து நடத்துவதற்குப் பொது அமைப்புக்கள் மற்றும் குருதிக் கொடை ஆர்வலர்கள் முன்வர வேண்டும். இதன்மூலம் யாழில் நிலவும் இரத்தத் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்ய முடியும் என்றார். (ம-3,18)

கள்.

கிளிநொச்சியில் தொற்றுக்குள்ளானவர் கொழும்பு - 13 இல் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் பணியாற்றிய இவர் கடந்த 28 ஆம் திகதி கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் உள்ள தருமபுரம் கிராமத்திற்கு வருகை தந்துள்ளார்.

குறித்த நபர் வருகை தந்தவுடன் அவர் உடனடியாக சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அவர் பணியாற்றிய உணவக உரிமையாளர் மற்றும் அங்கு கடமையாற்றிய சில பணியாளர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டமையினையடுத்து இவருக்கும் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போதே கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் கொரோனா தொற்றாளர்கள் இனம் காணப்பட்ட நிலையில் கிளிநொச்சி மாவட்டம் மாத்திரமே கொரோனா தொற்றாளர்கள் இன்றிய மாவட்டமாக இருந்த நிலையில் நேற்று முதலாவது கொரோனா தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இருப்பினும் பொதுமக்கள் அச்சம் கொள்ளும் அளவுக்கு நிலைமைகள் இல்லை எனவும், முதியவர்கள், சிறுவர்கள், கர்ப்பிணிகள் ஆகியோர் உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இருக்கு மாறும் அவசிய தேவைகளை தவிர்ந்து வெளியில் செல்வதனை தவிர்க்குமாறும் பொதுமக்களிடம் சுகாதார பிரிவினர் கோரியுள்ளனர். (ம-3,100,316)

டிருக்கின்றது.

இதனையடுத்து கரவெட்டி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொலிஸார், பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் அடையாளப்படுத்தப்பட்ட நபர்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் முயற்சித்துள்ளனர். (ம-3)

## வியாபாரம்...

இருவர் யாழ்.வடமராட்சி - மாலைச் சந்தை பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் நேற்று மாலை அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்ததாக கூறும் இவர்கள் யாழ். நகரில் ஐந்துசந்தி பகுதியில் வாடகைக்கு அறை ஒன்றை எடுத்து தங்கியிருந்துள்ளதுடன், எந்தவிதமான பதிவுகளையும் மேற்கொள்ளவில்லை.

இந்நிலையில் நேற்று மாலை வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, பிரதேச மக்கள் நடத்திய விசாரணையில் இவர்கள் மினுவாங்கொட ஆபத்து வலயத்திலிருந்து வந்துள்ளமை கண்டறியப்பட்

## விபத்துக்குள்...

க்கு சாவகச்சேரி வைத்தியசாலை யிலிருந்து சிகிச்சை பெற்று கடந்த 20ஆம் திகதி அதிகாலை தனது வீடு நோக்கி நடந்து சென்றுள்ளார்.

இதன்போது யாழிலிருந்து கொடிகாமம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் வரணி இயற்றாலைச் சேர்ந்த ஒன்பது பிள்ளைகளின் தந்தையான 80 வயதுடைய இளையதம்பி வல்லிபுரம் ஆவார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)




## நூற்றுக்கணக்...

கள் ஒவ்வொன்றும் 10 முதல் 25 அடி நீளமுடையவை.

இலங்கை பொலிஸார் மற்றும் கடலோர படையினர் இணைந்து குறித்த திமிங்கிலங்களை மீண்டும் கடலுக்குள் திருப்பி அனுப்பும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, குறித்த திமிங்கிலங்களை பார்க்க மக்கள் படையெடுத்த வண்ணம் உள்ளனர். (ம-3)

## கொரோனா...

யுள்ளமை நேற்று திங்கட்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், மினுவாங்கொட - பேலியகொட கொரோனா பரவல் கொத்தணியை அடுத்து 7 ஆயிரத்து 857 பேர் கோரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 11 ஆயிரத்து 335 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## ஒரு வாரத்துக்கு...

திர சில்வா கூறியிருக்கின்றார்.

இந்நிலையில் மேல் மாகாணம் மற்றும் பல பகுதிகளில் மட்டுமே ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது என்றார்.

கொரோனா வைரஸ் மேலும் பரவாமல் தடுக்க மக்கள் முடிந்தவரை வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மக்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாதவாறு அனைத்து நடவடிக்கைகளையும் முடிந்தவரை மேற்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளதாக இராணுவத் தளபதி மேலும் தெரிவித்தார். (ம-3)

## கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதில்
# சுகாதார அமைச்சரும் அரசாங்கமும் தோல்வியுற்றமை தெளிவாகியுள்ளது
### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

(கொழும்பு)

சுகாதார அமைச்சரும் அரசாங்கமும் தோல்வியுற்றமை தற்போது தெளிவாகியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் எனக் கூறினார்.

ஒக்டோபர் 4 ஆம் திகதி மினுவாங்கொடயில் உள்ள ஆடைத் தொழிற்சாலையின் ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டபோது, அரசாங்கம் உடனடியாகச் செயற்பட்டிருந்தால், நாட்டின் தற்போதைய நிலைமை தவிர்க்கப்பட்டிருக்கும் எனவும் குறிப்பிட்டார்.

இருப்பினும் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்திற்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்கி ஒக்டோபர் 22 ஆம் திகதி வரை நாட்டை முடக்காமல் இருந்தது என்றும் ஹரின் பெர்னாண்டோ குற்றம் சாட்டினார்.

இதேவேளை ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள மக்கள், உணவு மற்றும் பிற அத்தியாவசிய சேவைகளை பெற்றுக்கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் குறிப்பிட்டார்.

அத்தோடு எந்த வித சமூகப் பரவலும் இல்லை என தெரிவிக்கப்படும் போதும் இதுவரை கொரோனா தொற்று நோயாளிகள் பதிவாகாத ஒரே மாவட்டமாக கிளிநொச்சி மட்டுமே இருப்பதாகவும் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். (ம-03)


காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், ஊரெழு, கரந்தன் குறுக்கு றோட், நீர்வேலி மேற்கு ராசா கடை அருகாமையில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 44 பரப்புக் காணி ஊரெழு ஆனந்தகானம் பகுதியில் உள்ளது. பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை. (4529)

076 640 0974, 077 894 9549

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

லொக்டவுன் வந்தால் என்ன செய்வீர்கள்? காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

அமெரிக்க அதிஸ்ட விசா

2022ல் நீங்களும் அமெரிக்காவில்...

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

இன்னும் 04 நாட்களே

இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

55000 இலவச விசாக்கள்

0768226244

கடந்த காலங்களில் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா சென்ற வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

முதல் வருடம் பதிந்த போது எமக்கு கிடைக்கவில்லை, நான் மனம் தளரவில்லை இரண்டாவது வருடமும் V2 Travels ஊடாகவே விண்ணப்பித்தேன். அமெரிக்க விசா அதிஸ்டசாலிகளுள் ஒருவராக எமது குடும்பமும் தெரிவுசெய்யப்பட்டது ஒருவேளை நாம் தெரிவுசெய்யப்படாமல் விட்டிருந்தால் கூட நான் மீண்டும் மீண்டும் அதிஸ்ட விசா கிடைக்கும் வரை முயற்சி செய்துகொண்டே இருப்பேன். ஏனென்றால் V2 Travels ஊடாக ஏற்கனவே எனக்கு தெரிந்த பலர் அமெரிக்க விசா வென்றுள்ளதால் எனது தெரிவு என்றுமே V2 Travels தான். (C-505)

பிரகாஷ் குடும்பம் அமெரிக்கா விசா வெற்றியாளர்

V2 TRAVEL

V2 Travels

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

பிரான்ஸ் / ஜெர்மனி
நெதர்லாந்து / சுவிஸ்

1150 /= Kg

0768226240

எமது நேரடிக் கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம்
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-505)


# மரண அறிவித்தல்



## சின்னப்பா பாலசிங்கம்

**(ஓய்வு பெற்ற ஊடகவியலாளர் 1965-2015)**

யாழ்ப்பாணம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பா பாலசிங்கம் நேற்று (02.11.2020) திங்கட்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (02.11.2020 ) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-619)

தாவடி,
கொக்குவில்.

077 408 4126

தகவல்:-
மணி சோமசுந்தரம்,
சகோதரி


A/L 2021
மீட்டல் வகுப்பு
zoom Revision & Paper
AL/2020 இல் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான
Day Class

கணித & உயிரியல் பிரிவு

ஆரம்பம்: 04.11.2020
காலம் : திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 7.00 மணிமுதல் 12.30 மணிவரை

சாதாரண வகுப்புக்கள் வழமைபோல் ஆரம்பிக்கப்பட்டாலும் zoom ஊடான online வகுப்புக்கள் இறுதிவரை தொடரும்.
கொழும்பின் முன்னணி ஆசிரியர்களின் குழாமினால் ஆரம்பிக்கப்படுகின்றது.

இணைந்த கணிதம் Tamil and english medium – S.Premnath B.sc,PGDE 7:00am - 8:30am
உயிரியல் – V.Umashankar B.sc,PGDE 7:00am - 8:30am
பௌதீகவியல் – S.R.Jeyakumar B.sc,PGDE 9:00am - 10:30am
இரசாயனவியல் – V.Parameswaran B.sc,PGDE 11:00am - 12:30pm

ஆரம்ப அலகிலிருந்து இறுதிவரை வினாக்கள் செய்யப்படும்
(Past Papers & Model Questions)

தொடர்பு: Noble Academy
15,36th lane,Wellawatte, clombo - 06
011 - 236 3831 / 011- 250 5816 / 076 758 0659
இலங்கையில் எந்தப் பகுதியிலுள்ள மாணவர்களும் இந்த online (zoom) வகுப்பில் பங்கு பெறலாம்.
(4137)






வட மாகாணத்தில் குறைந்த விலையில்.... உங்கள் வேலை தளத்திற்கே நேரடியாக வழங்கப்படும்.

0777614441

Asphalt LANKA

No. 64, Palaly Road, Thirunelvely, Jaffna.

(4528)


# 1 ஆம் ஆண்டு ஆத்ம சாந்தி அழைப்பு



கடந்த 15.11.2019 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

அமரர்
## கண்மணி பரமசிங்காரம்

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (03.11.2020) செவ்வாய்க்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். எம் அன்புக்குரிய அனைவருக்கும் இத் தகவலைத் தாழ்மையுடன் அறியத் தருகின்றோம். (4524)

சர்வோதயா வீதி,
ஆவரங்கால் மேற்கு.

குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.